தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

பதின்மூன்றாவது தொகுப்பு

(வைத்தியப் பகுதி)

பதிப்பாசிரியர் :

புலவர். வி. சொக்கலிங்கம்

தமிழாசிரியர் (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகச் சங்கம், தஞ்சாவூர்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகச் சங்கம்

கி.பி. 1988]

[விலை. ரூ

RS-40

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : 257

தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

பதின்மூன்றாவது தொகுப்பு

(வைத்தியப் பகுதி)

பதிப்பாசிரியர் :

புலவர். வீ. சொக்கலிங்கம்

தமிழாசிரியர் (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகச் சங்கம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகச் சங்கம்

கி.பி. 1988] [விலை. RS 40

0257

Sarasvati Mahal Library. Thanjavur

முதற்பதிப்பு: 1988

வெளியீடு:
தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகச் சங்கம்,
தஞ்சாவூர்.

அச்சகம்:
சர்மாஸ் ஸானடோரியம் ப்ரஸ்
கணேஷ்நகர், புதுக்கோட்டை.
தொலைபேசி: 2659

தமிழ் சுவடிகளின் விளக்கம்

13-வது தொகுப்பு

மருத்துவப் பகுதி

சுவடி தோன்றிய காலம் நீண்ட தமிழ் எழுத்து வரலாற்றில் ஒரு திருப்புமுனை; கலைச்சுவடு, பல்துறை அறிஞர்களின் சிந்தனைச் சுவடுகளை எழுத்தாணி ஏடுகளில் பதிப்பதால் இதற்குச் சுவடி என்று பெயர் வந்ததோ?

காவியங்கள், நாடகங்கள், இசைப்பாடல்கள், புராணங்கள் மருத்துவம் முதலான பல்வேறு மனித இயல் கூறுகளைத் தம்மகத்தே கொண்ட சுவடிகள் ஆயிரக்கணக்கில் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றை நூல்களாக வடித்து இவ்வுலகிற்கு வழங்கி வருகின்றது சரசுவதி மகால். அத்துடன் இந்நூலகத்தில் உள்ள சுவடிகளின் விவரங்களைக் கல்வியாளர் பலரும் தெரிந்து பயன்பெறு முகத்தான் சுவடிகளின் விவரப்பட்டியல் தொகுதிகளையும் தொடர்ந்து மகால் வெளியிட்டு வருகின்றது. அத்தகைய வெளியீட்டில் மருத்துவப் பிரிவில் இடம் பெற்றுள்ள தமிழ்ச் சுவடிகளின் விளக்கப்பட்டியலில் இது 13-வது தொகுதி ஆகும். அகத்தியர் மருத்துவம் முதலாக வைத்திய வசனம் வரை பல்வகை அரிய மருத்துவ நூல்கள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. நம்நாட்டு முற்கால மருத்துவர்கள் மகாசாலம், இந்திர சாலம், சோதிடம், மந்திரம், மாந்திரீகம் முதலிய பிறகலைகளையும் மருத்துவ இயலுக்கு உறுதுணையாகும்

வகையில் வளர்த்துள்ளனர். அத்துடன் யோகயுக்திகளையும் மருத்துவமுறைகளில் கையாண்டுள்ளனர். கீதையின் மெய்ப் பொருளை விளக்கும் ஒரு சுவடி இத்தொகுதியில் இடம்பெற்று உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். நம் முன்னோர்களின் இச்சிந்தனைக் கருவூலங்களை நாம் தக்க முறையில் கற்றுத்-தெளிய வேண்டும். தெளிந்த பின் பிறர்க்கும் எடுத்துரைத்து மகிழவேண்டும் என விழைகின்றேன்.

இப்பதிப்பிற்கு மைய அரசு செய்த பொருளுதவிக்கு நாம் நன்றி செலுத்தக் கடப்பாடுடையோம்.

இதனை தொகுத்தளித்த புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்தம் நுட்பமான, தக்க விளக்கங்களோடு கூடிய நூலாக்கப் புலமை பாராட்டுக்குரியது. இத்தொகுப்பினை நன்முறையில் அச்சிட்டு வழங்கிய புதுக்கோட்டை சர்மா ஸானடோரியம் அச்சகத்தின-ருக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

மா. இராமு, இ. ஆ. ப.,
மாவட்டாட்சியர் மற்றும் இயக்குநர் பொறுப்பு
சரசுவதி மகால் நூலகச்சங்கம்,

தஞ்சாவூர்
17—8—87

முன்னுரை

> ''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்''

என்பார் திருவள்ளுவப் பெருந்தகையார். பெறுதற்கரிய மானிடப் பிறவியினை எடுத்த ஒருவன், உடற்பிணி இன்றி வாழ்ந்தால் அதுவே அவனுக்குப் பெருஞ் செல்வமாகும். நோய் வருதற்குப் பல காரணங்கள் உண்டு. முன்வினை (பெற்றோர் களால்) உடன் பிறப்பது, தீயொழுக்கம், உண்ணத் தகாத உணவுகளை உண்பது முதலானவைகளால் நோய் வருவது இயற்கை.

உடன் பிறந்தே கொல்லும் நோய்க்கு, உடன் பிறவாத மூலிகை முதலானவைகள் மருந்தாக அமையும். இவற்றைப் பல வழிகளில் பயன்படுத்தி, மகான்கள், மக்களை நோயற்ற வாழ்வில் வாழச் செய்தனர். அவ்வாறு செய்த மருத்துவங்களை வழிவழி கற்பித்தும், ஏட்டில்எழுதியும் வந்தனர். அவ்வாறுஎழுதி வைத்த சுவடிகள் ஏராளம். சித்தர்களும், மருத்துவர்களும் தாம் கண்ட அனுபவ முறைகளை நமக்குத் தந்தனர். அவைகள், சுவடிகளின் வடிவத்தில் உலகெங்கும் பரந்து கிடக்கின்றன.

அவற்றுள் ஒருசில எமது தஞ்சை, சரசுவதி மகால் நூல் நிலையத்தில் இடம் பெற்றுள்ளன. அவைகள், மிகச் சிறந்த மருத்துவ முறைகளைக் கொண்டன. அவற்றுள் 666-சுவடிகள் விளக்கக் குறிப்புக்களுடன் 3, 4, 5, 8, 9, 11, 12 ஆகிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 1, 2, 6, 7, 10 ஆகிய தொகுதிகள் இலக்கியங்கள்.

தற்போது, இப் பதின்மூன்றாவது தொகுதி வெளிவருகின்றது. இதில் 667 முதல் 751 வரை உள்ள சுவடிகள் (D. 1301—1500) விளக்கச் குறிப்புக்களுடன் வெளிவருகின்றன. இதன் உட்பிரிவுகள் ஒவ்வொன்றும் (a), (b), (c) எனக் குறிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மருத்துவப் பிரிவில் மருத்துவச் சுவடிகள் சேர்ந்து வருகின்றன. பெருந்தன்மையும், நற்சிந்தையும் கொண்ட பேரருளாளர்கள் சுவடிகளை எம்மிடம் தந்து, தங்கள் தங்கள் பெயரை நிலைநாட்டிப் புகழடைவதுடன், மக்களையும் காப்பாற்று வார்கள் என நம்புகிறேன்.

இதனை வெளியிடப் பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கும், இதனைப் பதிப்பிக்க அனுமதி தந்த, எமது மகால் இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான திருவாளர் து. இரா. இராமசாமி இ.ஆ.ப. அவர்கட்கும், தற்போதைய இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான மா. இராமு இ.ஆ.ப- அவர்கட்கும், இந்நூலக நிருவாக அதிகாரி பொறுப்பு திருவாளர் அ. பஞ்சநாதன் எம்.ஏ , பி.லிப்.சி. அவர்கட்கும் நன்முறையில் அச்சிட்டுத் தந்த புதுக்கோட்டை சர்மாஸ் ஸானடோரியம் ப்ரஸ் அச்சகத் தாருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இதிற்காணும் குற்றங் களைந்து, குணம் பொருந்தி வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.

இங்ஙனம்,

புலவர். வீ. சொக்கலிங்கம்

தஞ்சாவூர்
2–4–1987

தமிழாசிரியன் (ஓய்வு)
சரசுவதி மகால் நூலகச் சங்கம்.

பொருளடக்கம்

நூற்பெயர் பக்கம்

அ

அகத்தியருக்குச் சொல்லிய ஆணி முறை ... 34
அகத்தியர்-100-காரத்திரயம் ... 52
அகத்தியர்-205-க்குச் சுருக்கம்-21 ... 195
அகத்தியர்-1200-ல் சூத்திரம்-12 ... 17
,, அட்டவணை-வாகடம் ... 88
,, இந்திர சாலம் ... 170
,, இந்திர சாலம்-1200-முதற்காண்டம் ... 150
,, இந்திரசாலம் 1200-குறி சொல்ல சாலத்திரட்டு-2-ங் காண்டம் ... 151
,, இந்திரசாலம்-1200-3-ங் காண்டம் ... 152
,, இந்திரசாலம்-1200-4-ங் காண்டம் ... 153
,, இந்திரசாலம்-1200-சிவவசியம் 5-ங்காண்டம் ... 154
,, இந்திரசாலம்-1200-6-ங் காண்டம் ... 155
,, இந்திரசாலம்-1200-பரிபாஷை 7-ங் காண்டம் ... 156
,, கரிசல்-300 ... 97
,, கர்ம சூத்திரம் ... 66
,, குழம்பு ... 166
,, சகல கலைக்கியானம்-1200-க்கு-120 ... 35
,, சவுமிய சாகரம்-1200 ... 181
,, சுருக்கம்-16 ... 90
,, சூதமுனி சூத்திரம்-நீலகண்டவாலை ... 168
,, சூத்திரம் ... 58
,, சூத்திரம்-9 ... 133
,, சூத்திரம்-50 ... 61, 123, 163, 179
,, ஞானம் ... 45
,, ஞானம்-12 ... 36

அகத்தியர் ஞானம்-87 ... 162
,, ஞானம்-100 ... 47, 100
,, தண்டகம்-100 ... 50
,, திருநடன சூத்திரம் ... 56
,, நடுக்காண்டம்-300-ல் கர்ம நிவர்த்தி ... 67
,, பட்சணி ... 51
,, பரிபூரண சூத்திரம்-216 ... 59, 177
,, பெருநூல் வயித்தியம்-300 முதற்காண்டம் ... 189
,, பெருநூல் வாதம்-300-2-ங்காண்டம் ... 190
,, பெருநூல்-3-ங்காண்டம் ... 192
,, பெருநூல்-4-ங்காண்டம் ... 193
,, பெருநூல்-1000 ... 194
,, பெருநூல் வைத்தியம்-300 முதற்காண்டம் ... 183
,, பெருநூல் வாதம்-300-2-ங் காண்டம் ... 184
,, பெருநூல் 3-ங் காண்டம் ... 185
,, பெருநூல் 4-ங் காண்டம் சாலத்திரட்டு ... 186
,, ரசமணி மார்க்கம் ... 8
,, வாடக சூத்திரம்-1500 ... 148
,, வாகடம் ... 139
,, வாத காண்டம்-300-2-ங் காண்டம் ... 11
,, வாத காண்டம்-300-3-ங் காண்டம் ... 13
,, வாத காண்டம்-300-4-ங் காண்டம் ... 14
,, வாத சூத்திரம் ... 10
,, வைத்தியக் கும்மி-10 ... 165
,, வைத்திய சூத்திரம்-திருநீலகண்டம் ... 26
,, ... வைத்தியம்-80 ... 15, 29
,, வைத்தியம்-205 ... 16
,, வைத்தியம்-1500 ... 92
அட்டகர்மம் ... 146
அட்டகர்மம் முதலியன ... 173
அட்டவணை வாகடம்-அகத்தியர் ... 88
அமிர்த வாசகம்-ஞானயோக சாதனம்-நாதாந்தமாலை... 62
அனுபோக வைத்திய முறைகள்-
குழந்தைகள் வைத்தியம் ... 1

ஆ

ஆச்சரியம் - சருவ வியாதி வகையறிய .. 136

ஆணிமுறை - அகத்தியருக்குச் சொல்லியது .. 34

ஆயுள் வேத சாத்திரம் .. 140

ஆனந்தக் களிப்பு - சொரூபானந்தா .. 22

இ

இந்திரசாலத் திரட்டு - வாதகாண்டம் - 2ங் காண்டம் .. 3

,, ,, ,, 3ங் காண்டம் .. 4

,, ,, ,, 4ங் காண்டம் .. 5

இந்திரசாலம் 3-ங் காண்டம் - கக்கிசப்படலம் .. 32

இந்திரசாலம் - 1200 .. 161

,, அகத்தியர் .. 170

,, ,, 1200 முதற்காண்டம் .. 150

,, ,, 1200 2-ங் காண்டம் குறிசொல்ல சாலத்திரட்டு } 151

,, ,, 1200 3-ங் காண்டம் .. 152

,, ,, 1200 4-ங் காண்டம் .. 153

,, ,, 1200 5-ங் காண்டம் சிகவசியம் } 154

,, ,, 1200 6-ங் காண்டம் .. 155

,, ,, 1200 7-ங் காண்டம் .. 156

இந்திரசாலம் - 1200 - பொதிகைமாமுனி 2-ங் காண்டம் .. 198

இந்திரசால வெண்பா-100 குறுமுனி .. 158

இராமதேவர் சிவயோகம் - 200 .. 85

,, சூத்திரம் .. 55

,, சோசிய சூத்திரம்-17 .. 81

,, சோசியம்-10 .. 83

,, பலதிரட்டு - 500 .. 86

,, பாஷை - 18 ... 82

,, பெருநூல் - 1000 .. 84

,, மகாசாலம்-800-பாயிரம் .. 72

,, ,, ,, முதற்காண்டம் .. 72

,, ,, ,, 2-ங் காண்டம் .. 74
,, ,, ,, 3-ங் காண்டம் .. 75
,, ,, ,, 4-ங் காண்டம் .. 76
,, ,, ,, 5-ங் காண்டம் .. 77
,, ,, ,, 6-ங் காண்டம் .. 78
,, ,, ,, 7-ங் காண்டம் .. 79
,, ,, ,, 8-ங் காண்டம் .. 80
,, ,, வகார சூத்திரம்-10 .. 87
,, வைத்தியம்-81 .. 21
உடல் சக்கரம்-வியார்தியாளனுக்கு .. 135

க

கக்கிசப் படலம்-இந்திரசாலம் .. 32
கக்சிசம்-நவக்கிரகம்-கொங்கணர் .. 112
கடைக்காண்ட சூத்திரம்-60-கொங்கணர் .. 114
கடைப்பிள்ளை நவக்கிரக கக்கிசம்-கொங்கணர் .. 112
,, யோகசூத்திரம் .. 9
கரிசல்-300-அகத்தியர் .. 97
கருவூரார் சூத்திரம்-100 .. 27
,, ,, -115 .. 176
,, பாடல் .. 54
கர்ப்பம் தரிக்கத் தயிலம் முதலியன .. 131
கர்ம சூத்திரம்-அகத்தியர் .. 66
கர்ம நிவர்த்தி ,, .. 67
கர்மானுபோக சூத்திரம்-302 .. 120
கலைக்கியான காண்டம்-1200 .. 188
கலைக்கியானம்-1200-க்குச் சுருக்கம் 120 ... 35
கற்ப முறை-கைலாசச் சட்டை முனி .. 175
கற்பம்-சட்டைமுனி ... 101
கற்பம்-பின்னூறு-புலத்தியர் .. 111
,, -முன்னூறு-புலத்தியர் .. 110

கா

காயாதி கற்பம்-100-சட்டை முனியார் .. 101
காலாங்கியார் தேவி பூசாவிதி .. 28
காரத்திரயம்-100-அகத்தியர் .. 52

கி

கிணறு வெட்ட கூப சாத்திரம் .. 125

கியாழ வகைகள் .. 99

கு

குணபாடம் .. 96, 143

குணவாடகம் .. 16, 145

கும்ப முனி-1200 .. 31

,, -சூத்திரம்-300 .. 174

கும்மி-10-அகத்தியர் .. 165

குழந்தைகளுக்கு வேப்பெண்ணெய்த் தயிலம் .. 134

குழந்தைகள் வைத்தியம் .. 46

,, -அனுபோக வைத்திய முறைகள் .. 1

குழம்பு-அகத்தியர் .. 166

குறி சொல்ல சாலத்திரட்டு-அகத்தியர் இந்திரசாலம் 2-ங் காண்டம் ... 158

குறுமுனி இந்திரசால வெண்பா-100 ... 158

கூ

கூப சாத்திரம்-கிணறு வெட்ட .. 125

கெ

கெருட பஞ்சாட்சரம் .. 172

கை

கைலாசச் சட்டை முனியார் கற்பமுறை .. 175

கொ

கொங்கணர் கடைக்காண்ட சூத்திரம்-60 ... 114

,, கடைப்பிள்ளை நவக்கிரக கக்கிஷம் .. 112

,, ஞானம்-13 .. 103

,, மூவாயிரத்து முறை .. 65

சு

சகல கலைக்கியான காண்டம்-1200 .. 188
சகல கலைக்கியானம்-1200-க்குச் சுருக்கம்-120 .. 35
சட்டை முனி ஐயா நிகண்டு ... 18
,, பட்சணியில் தெளிவு ... 37
சட்டை முனியார் கற்பமுறை ... 175
,, ,, காயாதி கற்பம்-100 ... 101
,, ,, பட்சணி ... 132
சண்முக பூசை-30 ... 106
சத சுலோகீ-ஜ்வரசிகித்சா ... 94
சத்திசாலம் 1200-பொதிகைமுனி-முதற்காண்டம் ... 197
சத்துரு மித்துரு சாத்திரம் ... 47
சந்தனுதித் தயிலம் முதலியன ... 95
சந்திரோதய வாலை ... 160
சர நூல் ... 157
சருவ வியாதி வகையறிய ... 136
சவுமிய சாகரம்-1200-அகத்தியர் ... 181

சா

சாத்திரம்-35-நாடி ... 164
,, ஆயுள்வேதம் ... 140
,, - (கூப) கிணறுவெட்ட ... 125
,, - சத்துரு மித்துரு ... 47
சாலத்திரட்டு-அகத்தியர் பெருநூல் 4ங்காண்டம் ... 186
,, -இந்திர-வாத காண்டம் 2-ங்காண்டம் ... 3
,, ,, ,, 3-ங்காண்டம் ... 4
,, ,, ,, 4-ங்காண்டம் ... 5
,, -குறிசொல்ல-அகத்தியர்-1200
,, 2-ங்காண்டம் } 151
,, -தட்சிணுமூர்த்தி 3-ங்காண்டம் ... 199
சால நிகண்டு-200 ... 159
சாலம்-800-இராமதேவர் ... 72
சாலம்-800-இராமதேவர் முதற்காண்டம் ... 72
,, ,, ,, 2-ங் காண்டம் ... 74
,, ,, ,, 3-ங் காண்டம் ... 75

,, ,, ,, 4-ங் காண்டம் ... 76
,, ,, ,, 5-ங் காண்டம் ... 77
', ,, ,, 6-ங் காண்டம் ... 78
,, ,, ,, 7-ங் காண்டம் ... 79
,, ,, ,, 8-ங் காண்டம் ... 80
சாலம்-1200 ... 161
,, -1200-அகத்தியர் முதற்காண்டம் ... 150
,, -1200 ,, 2ங்காண்டம் குறிசொல்ல ... 151
,, -1200 ,, 3-ங் காண்டம் ... 152
,, -1200 ,, 4-ங் காண்டம் ... 153
,, -1200 ,, 5-ங் காண்டம் சிகவசியம் ... 154
,, -1200 ,, 6 ங் காண்டம் ... 155
,, -1200 ,, 7-ங்காண்டம் பரிபாஷை ... 156
,, -1200-பொதிகை முளி முதற்காண்டம் ... 197
,, -1200- ,, 2-ங் காண்டம் ... 198
சாலவெண்பா-100-குறுமுளி ... 158

சி

சிகவசியம்-அகத்தியர் இந்திரசாலம் .. 154
சிதம்பர விதி-24 .. 24
சில வாகட முறைகள் .. 91
சிவ சுந்தரானந்தர் பாடல்-16 .. 25
சிவயோகம்-200-இராமதேவர் .. 85

சு

சுந்தரானந்தர் பாடல்—16 .. 25
சுப்பிரமணியர் அகத்தியருக்குச் சொல்லிய ஆணிமுறை .. 34
சுர சிகிச்சை-சதசுலோகி .. 94
சுரநூல் முதலியன .. 167
சுருக்கம்-16-அகத்தியர் .. 90

சூ

சூதமுனி சூத்திர நீலகண்டவாலை-அகத்தியர் ... 168
சூத்திரம் 9-அகத்தியர் ... 133
,, 10-இராமதேவர் வகாரம் ... 87
,, 12-அகத்தியர் 1200ல் ... 17

,, 17-இராமதேவர் சோசியம் ... 81
,, 30-திருமூலர் ... 44
,, 50-அகத்தியர் 61,123,163,179
,, 60-கொங்கணர் கடைக்காண்டம் ... 114
,, 100-கருவூரார் ... 27
,, 115- ,, ... 176
,, 216-அகத்தியர் பரிபூரணம் ... 177
,, 300-கும்பமுனி ... 174
,, 302-கர்மானுபோகம் ... 120
,, 1500-அகத்தியர் வாகடம் ... 148
,, அகத்தியர் 10,58,66
,, அகத்தியர் திருநடனம் ... 56
,, அகத்தியர் பூரணம் ... 59
,, இராமதேவர் ... 55
,, கடைப்பிள்ளை யோகம் ... 9
,, திருநீலகண்டம்-அகத்தியர் வைத்தியம் ... 26
,, திருநீலகண்டவாலை-சூதமுனி-அகத்தியர் ... 168
,, ரோமரிஷி ... 7
,, ரோமரிஷி சொச்சம் ... 53

சொ

சொரூபானந்தார் ஆனந்தக் களிப்பு ... 22

சோ

சோசிய சூத்திரம்-17-இராமதேவர் ... 81
சோசியம்-10-இராமதேவர் ... 83

சௌ

சௌமிய சாகரம்-1200-அகத்தியர் ... 181

ஞா

ஞான கற்பம் பின்னூறு-புலத்தியர் ... 111
,, முன்னூறு- ,, ... 110
ஞானம்-12-அகத்தியர் ... 36
,, -13-கொங்கணர் ... 103

,, -87-அகத்தியர் ... 162
,, -100 ,, ... 45, 47, 100
ஞானயோக சாதனம் ... 62

த

தண்டக பட்சணி-நந்தி ... 169
தண்டகம்-100-அகத்தியர் ... 50

தி

திருநடனசூத்திரம்-அகத்தியர் ... 56
திருநீலகண்டம்-அகத்தியர் வைத்திய சூத்திரம் ... 26
திருமந்திரம்-நிமிளைக்கட்டு ... 43
,, ... -வகாரம் ... 2
திருமூலர் சூத்திரம்-30 ... 44
,, ... தண்டக பட்சணி ... 169
,, ... நாடிப்பரீட்சை-வாகடம் ... 171

தெ

தெட்சணமூர்த்தி - 500-ல் வழலை குருமுறை-
2-ங் காண்டம் ... 70
,, -சாலத்திரட்டு-3-ங் காண்டம் ... 199
,, -பரிபாஷை-500-முதற்காண்டம் ... 69

தே

தேவி பூசாவிதி-காலாங்கியார் ... 28

ந

நடுக்காண்டம்-300-ல் கர்மநிவர்த்தி ... 67
நந்தி தண்டக பட்சணி ... 169
நவக்கிரக கக்கிசம்-கொங்கணர் ... 112

நா

நாடி சாத்திரம்-35 ... 164
நாடிப் பரீட்சை ... 93
,, ... ,, -திருமூலர் ... 171
நாதாந்தமாலை ... 62

நி

நிகண்டு-200-சால ... 159
,, -சட்டைமுனி ... 18
,, மச்சமுனி ... 53
,, மச்சமுனி-105 ... 20
நிமிளைக்கட்டு-திருமந்திரம் ... 43
நீலகண்டவாலை ... 39
,, -அகத்தியர்-சூதமுனி ... 168

ப

பஞ்சலோக வேதை ... 60
பஞ்சாட்சரம்-கெருட ... 172
பட்சணி-அகத்தியர் ... 51
,, சட்டைமுனி ... 132
,, திருமூலர் ... 169
பட்சணியில் தெளிவு-சட்டைமுனி ... 37
பதஞ்சலி வியாக்கிரபாத மகாபடலம் .. 23
பரிபாஷை-500-தெட்சணாமூர்த்தி-முதற்காண்டம் ... 69
,, 500 ,, 2ங் காண்டம் வழலைக் குருமுறை .. 70
,, அகத்தியர் இந்திரசாலம்-1200-7-ங் காண்டம்... 156
பரிபூரண சூத்திரம்-216-அகத்தியர் 59,177
பலதிரட்டு-500-இராமதேவர் .. 86

பா

பாலகிரகத்துக்கு மந்திரம் .. 100
பாஷாணக் கட்டுமுறை .. 57

பி

பிரம்மமுனி வைத்தியம்-685 49

பு

புலத்தியர் ஞானகற்பம்-பின்னூறு ... 111
,, ,, ,, -முன்னூறு ... 110
புலத்தியர் மெஞ்ஞானகற்பம்-பின்னூறு ... 111
,, ,, ,, -முன்னூறு ... 110
புருஷயீடு ... 64

பூ

பூசாவிதி-காலாங்கியார் ... 28
,, -வாலை ... 102
பூசை-30 சண்முகர் 106
பூரண சந்திரோதயு வாலை ... 160

பெ

பெருநூல்-1000-அகத்தியர் .. 194
,, 1000-இராமதேவர் .. 84
,, அகத்தியர்-முதற்காண்டம் ... 183
,, ,, 2-ங் காண்டம்-வாதம் .. 184
,, ,, 3-ங் காண்டம் .. 180
,, ,, 4-ங் காண்டம்-சாலத்திரட்டு .. 186
,, ,, வயித்தியம்-300-முதற்காண்டம் .. 189
,, ,, வாதம்-300-2-ங் காண்டம் .. 190
,, ,, 3-ங் காண்டம் .. 192
பெருநூல்-அகத்தியர்-4-ங் காண்டம் ... 193

பொ

பொதிகை மாமுனி-1200-இந்திரசாலம்
2-ங் காண்டம் ... 198
,, ,, -1200-சத்திசாலம்
-முதற்காண்டம் ... 197

போ

போகநாதர் வேத வாக்கியம் ... 178

ம

மகாசாலம்-800-இராமதேவர் ... 72
,, -800 ,, -முதற்காண்டம் ... 72
,, -800- ,, -2-ங் காண்டம் ... 74
,, -800- ,, -3-ங் காண்டம் ... 75
,, -800- ,, -4-ங் காண்டம் ... 76
,, -800- ,, -5-ங் காண்டம் ... 77
,, -800- ,, -6-ங் காண்டம் ... 78
,, -800- ,, -7-ங் காண்டம் ... 79

மகாசாலம் -800- ,, -8-ங் காண்டம்	... 80
மச்சமுனி-800-ல் தெளிவு	... 37
மச்சமுனி நிகண்டு	... 53
,, ,, -105	... 20
மந்திரம்-பாலகிரகத்துக்கு	... 100
மந்திரம்-வைத்தியம்	... 33

மி

மித்துரு சத்துரு சாத்திரம்	.. 47

மூ

மூலிகை வாகடம்	.. 144
மூவாயிரத்து முறை-கொங்கணர்	... 65

மெ

மெஞ்ஞான கற்பம்-பின்னூறு-புலத்தியர்	.. 111
,, ,, -முன்னூறு ,,	.. 110

யோ

யோக சூத்திரம்—கடைப்பிள்ளை	.. 9

ர

ரசமணி மார்க்கம்—அகத்தியர்	.. 8

ரோ

ரோமரிஷி சூத்திரம்—100	.. 7
,, சொச்சம்-சூத்திரம்	.. 53

வ

வகார சூத்திரம்-10-இராமதேவர்	.. 87
வகாரம்-திருமந்திரம்	.. 2
வழலைக் குருமுறை-தெட்சணாமூர்த்தி	.. 71

வா

வாகட சூத்திரம்—1500-அகத்தியர்	.. 148
வாகட முறைகள் சில	.. 91
வாகடம்—அகத்தியர்	.. 139
,, - ,, அட்டவணை	.. 88
,, - குண	.. 145

,, -திருமூலர் நாடிப் பரீட்சை .. 171

,, -மூலிகை .. 144

வாத காண்டம்-300-அகத்தியர்-2-ங் காண்டம் ... 11

,, -300- ,, -3-ங் காண்டம் .. 13

,, -300- ,, 4 ங் காண்டம் .. 14

,, -இந்திரசாலத்திரட்டு-2-ங் காண்டம் .. 3

,, - ,, -3-ங் காண்டம் .. 4

,, - ,, -4-ங் காண்டம் .. 5

வாதசூத்திரம்—அகத்தியர் .. 10

வாதம்-300-அகத்தியர் பெருநூல்-2-ங் காண்டம் .. 184

,, -300 ,, ,, ,, .. 190

வாலை பூசாவிதி .. 102

வாலை பூசை 43, 63

வாலை பூரண சந்திரோதயம் ... 160

வி

வியாக்கிரபாத பதஞ்சலி மாபடலம் .. 23

வியாதியாளனுக்கு உடல் சக்கரம் .. 135

வியாதி வகையறிய ஆச்சரியம் .. 136

வெ

வெண்பா-100-குறுமுனி இந்திரசால்லம் .. 158

வே

வேதவாக்கியம்-போகநாதர் .. 178

வேப்பெண்ணெய்த் தயிலம்-குழந்தைகளுக்கு .. 134

வை

வைத்தியக் கும்மி-10-அகத்தியர் .. 165

வைத்திய சிந்தாமணி .. 137

வைத்திய சூத்திரம்-திருநீலகண்டம்-அகத்தியர் .. 26

வைத்தியத் திரட்டு	4,38,41,68,89,98,104,105,107,108,109, 111,115,116,117,118,119,121,122,124, 126,127,128,129,130,138,139,141,142, 147,149,180,182
வைத்திய முறைகள்-குழந்தைகள் வைத்தியம் ..	1
வைத்தியம் ..	30
,, -80-அகத்தியர்	15,29
,, —81-இராமதேவர் ..	21
,, —205—அகத்தியர் ...	16
,, —300-அகத்தியர் பெருநூல்-முதற்காண்டம்	183,189
,, —685—பிரம்மமுனி ..	49
,, —1500-அகத்தியர் ..	92
,, —குழந்தைகள் ..	46
,, —மந்திரம் ...	33
வைத்தியம் வசனம் ..	40

தஞ்சை சரசுவதி மகால் நூலகம்

தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

13-வது தொகுப்பு

மருத்துவப் பகுதி

வரிசை எண்: 1301 சுவடி எண்: 667

அனுபோக வைத்திய முறைகள்
குழந்தை வைத்தியம் உரைநடை

ஏடுகள் : 56. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது. பக்கத்திற்கு : 4-7 வரிகள். அளவு : 38 × 2 செ. மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை : முற்று முளது.

தொடக்கம்:

மாந்தம்—நளுற்சுரம்—குழந்தைகளுக்கு

முற்காளை யிலை ரசம் 1¼ வறுகடித்து கொழந்தைகளுக்கு 8 நாளைக்கிக் கொடுக்கவும்.

மேல் சென்றுல் ரெட்டிக்கவும் உப்பு இல்லாத பத்தியம் நளுற சுரத்துக்கு உப்பு சேர்க்கவும்.

முடிவு:

மேல்படி 1 வசத்தைப் பேத்து ஷி காயி உடனே கல்வத்தில் ரெண்டு சாமம் அரைத்து பீங்கான் சட்டியில் வைத்துக் கொள்ளவும்.

மிளகு அல்லது சங்கம் பழம் பிரமாணம் வெல்லத்திலும் வெந்நீரிலும் குடுக்கவும்.

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், அசீரணத்துக்கு அவிழ்தம், ஒருத்தலை நோவுக்கு அவிழ்தம், காது குத்தலுக்கு மருந்து, நேத்திரபித்த மென்பது மஞ்சள் காமாலை மருந்து, கால் பிடிப்புக்கு அவிழ்தம், தேளுக்கு மருந்து, சீதபேதி அவிழ்தம், பக்கசூலை மார்நோவுக்கு கியாழம், கோரோசினை மாத்திரை, மாந்தம், வயிறு உப்பிசம், இசுவுக்கு மாத்திரை முதலியன உள்ளன.

வரிசை எண் : 1302 சுவடி எண்: 668

திருமந்திரம்—வகாரம்

ஏடுகள் : 49. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது.
பக்கத்திற்கு : 8—9 வரிகள். கி. எண்ணிக்கை : 1000.
அளவு : 23 × $3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : திருமூலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

மேனி யெருக்கு விழுதி நுணச்சாரு
வாணிய தாம்புலம் வழங்கிய வெங்காரங்
கஊணிய மத்தைக் காய்கலருஞ் சுராப்பானம்
தானிப் பழச்சாறு சமனுய்ச் சுருக்கிடே.

முடிவு:

கல்லுப்புங் காரமும் போட்டு பழச்சாறுவிட்டரைத்து சிமிள்ப் போலே பண்ணிக் காய வைக்கவும்.

அந்தச் சிமுளில் முந்தின மருந்து வில்லை வைத்து சீலை மண் செய்து உலத்திப் புடம் போடவும்.

காலம்:

இல்லை

குறிப்பு:

இது, செய்யுளும் உரைநடையுமாக இருக்கிறது, இடையில் வங்கத்துக்குத் திருமந்திரம் என்ற தலைப்பு ஒன்று மட்டும் காணப் படுகின்றது. ஒவ்வொரு பிரிவு தொடக்கத்திலும் 'திருமந்திரம்' என்றே தொடங்குகிறது.

வரிசை எண் : *1303* சுவடி எண் : *669 (a)*

இந்திரஜாலத் திரட்டு—வாத காண்டம்-2ங் காண்டம்

ஏடுகள் : 72. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 9-10 வரிகள். கி. எண்ணிக்கை : 1700.
அளவு : 23 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

தான முத்திய வைத்திய காண்டத்திலுள்ள
சகலமருந் தானதெல்லாந் தகுதி யாக
வானம் முத்திபெத்த பெரியோர்கள் . . . .
மகத்தான வாதவித்தை யினி . . . . வெல்வோ

முடிவு:

போவானே யிறுதயத்தில் பத்தி முத்தி
புகுவானே புகமாட்டான் பொன்னு பென்று
வாள்வான முன்னூறு ரண்டாங் காண்டம்
பதன்பட ரசவரத மான முத்தே 546.

வாதகாண்டம் ரண்டாங்காண்டம் முத்தும்.
மணல் விநாயகர்துணே.
குழந்தைமானன் குரு லட்சிக்கவும்.

காலம்:

இல்லே

குறிப்பு:

இதில், முதலாங்காண்டம் இல்லை. பாடல்கள் 130லிருந்து தொடங்குகின்றன. 246 பாடல்கள் உள்ளன. மிகவும் செல்லரித்திருப்பதால் செய்யுட்கள் சரிவர வாசிக்க இயலாத நிலையில் உள்ளன.

வரிசை எண் : 1304 சுவடி எண் : 669 (b)

இந்திரஜாலத் திரட்டு-வாத காண்டர்-3-ம் காண்டம்

ஏடுகள் : 72. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 9-10 வரிகள். கி. எண்ணிக்கை : 1700.
அளவு : 23 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

மாந்தரிக மோடி வித்தை

வேறுதுறை யா . . . . . . தற்க் கெல்லாம்
மெய்யான யந்திரமா கால மாடக்
கோதுகிறேன் மாந்தரீகம் வரலா றெல்லாம்
குமரகுரு பரமுருகன் சரணம் போத்தி

முடிவு:

. . . . . . தடா வந்தாக்கால் மூணுங் காண்டம்
வகையான மாரணஞ்செய் சினைத்தல்
தேகமே செய்யாதே நீதா னப்பா
பாடு வெவ்வேடு மூன்றுங் காண்ட முற்றே. 300

மூன்றுங்காண்டம் இந்திரசாலம் நொக்குவித்தை
எழுதி முகிந்தது முத்தும்.
ஆக காண்டம் மூன்றுக்கு விருத்தும் துளாயிரம்
குளந்தைவாளன் குருசாமி திருவடிகளே சரணம்.

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், மாந்திரீக மோடி வித்தை, சருவ தேவதை மந்திரம், விரபத்திரன், திக்குபாலகன், அஷ்டமாஞகம், அஞ்சுகப் பொடி, உருமாத்தம், திக்கு பெந்தனம், எட்டாங்கற்ம விதி, அட்டாங்க அகோர மந்திரம், மதனகலை வசியம், திலதம், மோகினிப் பெண் துடர முதலியன உள்ளன.

———

வரிசை எண் : 1305 சுவடி எண் : 669 (c)

இந்திர காலத்திரட்டு--வாதகாண்டம்-4-ங் காண்டம்

ஏடுகள் : 72. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 9-10 வரிகள். கி. எண்ணிக்கை : 1700.
அளவு : 23 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக் கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

இந்திரசால வித்தை

மாஞெருகை மழுவொருகை........
......தஞதன வாதம்........
நான்ஞெருகை...........வித்தை
நவிலுகிறேன் நந்திகுரு நாதாக் கள்தான்

முடிவு:

முத்திபெறுந் தவயோகி யாஞல் வித்தை
மொளிதப்பா துலகினிலே நடந்தாயாஞல்
சத்தியருள் சகலசித்துங் கைக்குள் ளாகுஞ்
சத்தியந்தா னிந்தனூல் காண்ட முத்தே 300

நாலாங்காண்டம் மாந்திரிகம் முற்றும்.
குளந்தையானந்தா இரட்சிக்க

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், இந்திரசால வித்தை, அட்டகுல பருவதம், மோடி வித்தை, மாடன் தியானம், ஆகாசமோடி, மாரணம், உடல்கட்டு மந்திரம், வாரி மோடி, பாவை மோடி, மாந்தரிய மகுத்திரள் உள்மூலம், மானம்பாடி, சதாசிவ தியானம், வக்கணுத்தி வித்தை, பிரம்ம தியானம், வல்லூத்தின் கரு, கருக்கு வித்தை, கஸ்தூரி பிள்ளை முதலியன உள்ளன.

இதன் பின்னர் வைத்தியம் எழுதிய இரண்டு ஏடுகள் சேர்க்கப்பட்டு உள்ளன.

———❀———

வரிசை எண் : 1306 சுவடி எண் : 670

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 54. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது
பக்கத்திற்கு : 5-7 வரிகள். கி. எண்ணிக்கை : 750.
அளவு : 24 × 2½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர்: பலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

ராமதேவர் சூத்திரம்—பத்து

காணப்பா யேரியிலே விளைந்த பிண்டம்
கடிதான மாய......டெடுத்து வந்து
பூணப்பா பொற்காரம் பொறித்துக் கொண்டு
பூண்டத்தின் வாய்பிளந்து அதனுள் போட்டு

முடிவு:

லிங்கம்	விராகனெடை	4
பூரம்	,,	2
பொரிக்காரம்	,,	6
வாளம்	,,	12
சித்தாமணக்குப் பருப்பு	,,	4

பூனைக்காலி விளானில் பனங்கினங்கு சர்க்கரை பசுவின் நெய் நிரைத்து பசுவின் பாலில் குடிக்க யில்க்கை.

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், 83 வரை ஏடுகள் இருப்பினும், இடையிடையே ஏடுகள் இல்லை. அதனால் தொடர்ச்சி இல்லை. முன்னதாக உள்ளதாக உள்ள இராமதேவர் சூத்திரம் 10ல் ஒரு ஏடு மட்டுமே உள்ளது. அடுத்து மந்திரங்கள் உள்ளன. பின்னர் வைத்தியம் இருக்கிறது.

இதில் பூவாலேயிரைக்க மந்திரம், மேகம் இருபதுக்கும் சூரணம், ஆனந்த வயிரவன், சன்னி பதினெட்டுக்கு, முதண்டத் தயிலம், கெற்ப நோய்க் கெண்ணை, பிள்ளை பெற மாட்டாதவளுக்கு முதலியன உள்ளன.

வரிசை எண் : 1307 சுவடி எண்: 671 (a)

ரோமரிஷி சூத்திரம்-100

ஏடுகள்: 28 (48-75). ஏட்டின் நிலைமை: சிறிது பழுது.
பக்கத்திற்கு: 9-10 வரிகள். கி. எண்ணிக்கை : 300.
அளவு : 18 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : ரோமரிஷி. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

மூலவட்ட மானகுரு பாதங் காப்பு
முத்திக்கும் வித்தான முதலே காப்பு
மேலவட்ட மானபர பிரம்மா காப்பு
வேதாந்தங் கடந்துநின்ற மெய்யே காப்பு
காலவட்டத் தங்கிமதி யமுர்தப் பாலைக்
கண்டுபசி யாத்திமனக் கவடு நீங்கி
ஞாலவட்டச் சித்தரொடு பெரியோர் பாதம்
நம்பினதால் ரோமனெனப் பேரு தானே

முடிவு:

உப்பல்லோ பிண்டத்திற் சேர்ந்த போதே
உடலுயிரு மொன்ருகித் தண்ணீ ராச்சு
அப்பல்லா முப்பூவுக் காணி யாணி
அதைவிட்டால் கட்டாது வழலை மார்க்கம்

செப்பவல்லோ பத்துக்கு மூட லாச்சு
நீச்சனமா யிந்தனூல்த் தெளிவோ ரொம்ப
முப்பொருளு மொன்ருகி நின்ற சோதி
மூலவட்டக் கருவாலென் மொழிதான் முற்றே 100.

சரஸ்வதி துணையாகவும்
விக்கினேசுபரன் துணையாகவும்
மகமாயி துணையாகவும் வேண்டியது.

காலம்:

1848—ம் வருஷம் மார்கழி மாதம் 3-ம் தேதி மாரிமுத்து அய்யா ரோமரிஷி சூஸ்த்திரம் வழலை மார்க்கம் நூறு எழுதி முகிந்தது முற்றும்.

ஆண்டவன் துணையாக வேண்டியது.

குறிப்பு:

இதில், ரோமரிஷி பெயர்க்காரணம், சிங்கி வித்தை, தாம்புர கற்பம், சொர்ண பற்பம், வெள்ளி பற்பம், அயபற்பம், வங்க பற்பம், வெள் வங்கம், சிறுனகம், துத்தனகம், உப்பு, குருடல், திருடன், திரு பற்பம், அப்பிரகம், நிமிளை, சூத பற்பம், சாதிலிங்கம், பிடரி வலி, சிங்கனவ லோகம், துருசுக்குரு ஆயிளை, சவுச்காரம், சாரம், காரம், துருசுச் சன்னம், வழலை சவுக்காரம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1308 சுவடிஎண் : 671 (b)

அகத்தியர் ரமணி மார்க்கம்

ஏடுகள் : (91-95) 5 ஏட்டின் நிலைமை : மிகப் பழுதுபட்டது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். கி. எண்ணிக்கை: 100. அளவு : 18 × 3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும் உள்ளது.

தொடக்கம்:

ஆதியந்த மில்லாத சின்மயத்தின் பாதம்
அகண்டபரி பூரணமாம் ஆத்தாள் பாதம்

தொடக்கம்:

சோதிநிற மாகிநின்ற கிணேசன் பாதம்
சொல்தனக்கு மெட்டாத சூட்சா சூட்சம்
விதியென்ற பராபரத்தில் நந்தி பாதம்
வேதாந்த சாத்திரத்தின் வெளியின் மார்க்கம்
சோதியெனும் பராபரத்தில் நடனஞ் செய்த
சுடரொளியின் பாதமது காப்புத் தானே.

முடிவு:

பார்க்கவே இம்முறையைச் சொன்ன யானல்
பாளான நரகமெய்தும் பாரு பாரு
கார்க்கவே சீஷனுட மனதைக் கண்டு
கைமுறையாய்ச் சொல்லிவிடு ஞான மார்க்கம்
யேர்க்கவே ரசமணியின் மார்க்கந் தானும்
என்மக்காள் சொல்லிவிட்டேன் யேக மார்க்கம்
சேர்க்க(வே) இம்முறையை உனக்குச் சொன்னேன்
செழும்கருணை பதினலின் கடாச்ச முற்றே.

குருபாத முன்னிற்கவும்
சிவமயம்

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், ரசமணி செய்முறை கூறப்பட்டுளது. நல்ல முறைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

வரிசை எண் : 1309 சுவடி எண் : 671 (c)

கடைப்பிள்ளை யோக சூத்திரம்

ஏடுகள் : 12 (7-19) ஏட்டின் நிலைமை : மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். கி. எண்ணிக்கை: 200. அளவு : 18 × 3 செ. மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : கடைப்பிள்ளை. முழுமை : முற்றும் உளது.

தொடக்கம்:

ஆதியென்ற சுழிமுனையைத் தியானம் பண்ணி
அதன்பிறகு அரினமோ நன்றாக வென்று
நீதியுடன் குருவாழ்க வென்றே சொல்லி
நிரஞ்சனமாஞ் சற்குருவைத் துணையென் றேதான்
சோதியென்ற கமலமடா அண்டத் தாதி
துலங்குகின்ற தீபமதைத் தியானம் பண்ணி
ஓதியதோர் மந்திரத்துக் குயிராய் நின்ற
ஓம்நமோ கணபதிதன் பாதம் காப்பே.

முடிவு:

பண்ணப்பா பூசைவிதி நன்றாய்ப் பாரு
பத்திகொண்டு தீட்சையதில் பதிவாய் நில்லு
நண்ணப்பா பச்சணியை உ(ற்)றுப் பாரு
நடுவான தண்டக்கம் நாட்டிப் பாரு
விண்ணப்பா தானேக்கி ஞானம் பாரு
மெய்யான அமுற்தபோ தகத்தைப் பாரு
முண்ணப்பா கண்ணொளிபோ லொன்றே சூட்சம்
முத்தியே கடாட்சம்பூ ரணந்தான் முற்றே. 37

சிவமயம்.

முற்றும்.

குருவே துணையாக வேணும்.

காலம்:

இல்லை

குறிப்பு:

இது,யோக மார்க்கத்தைப் பற்றிக் கூறுகிறது. சற்று எளிமையாகவும் கூறுகின்றது.

வரிசை எண் : 1310 சுவடிஎண் : 672

அகத்தியர் வாத சூத்திரம்

ஏடுகள்: 44(50-93). ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 10-13 வரிகள். கி. எண்ணிக்கை : 2000. அளவு : 25 × 4½ செண்டி மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

......பழச்சாருங் கூட்டி......
மிண்ட சட்டியில் வார்க்......
..................சாமம்
மாண்டுமடா வலியுமடாக் கட்டிப் போச்சு.

முடிவு:

வெண்பா

காப்பேது வாதங் கடந்த குரைபாடத்
தாப்பேது சா....சாத்தவே—மாப்பேது
வாதஜால முன்னூறும் வகாரத் துரைசறிதாள்
வேதமே சொல்லி விளம்பு. 299

தெட்சணாமூர்த்தியுடைய பெருநூல் சாலத்தில்
வகார முற்றும்.

ஆக காண்டம் ரெண்டுக்கு 599

சரசோதி நம.

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், துத்தக்கட்டு, பூவெடுக்க, கருவங்கம், கரியுப்பு, சக்திவிந்து, சிவவிந்து, கருவிழிக்கு நெய், வெண்காரக்கட்டு, நவச்சாரக்கட்டு, சீனக்கர் செந்தூரம், ஐவிரலிச்சாறு ...... சாதிலிங்க மெழுகு, கெந்தகச் செம்பு, ஞதவித்தை முதலியன உள்ளன.

கடைசி ஏட்டில் இதனைத் தொடர்ந்து வைத்தியம் எழுதப்பட்டு உள்ளது.

வரிசை எண்: 1311 சுவடி எண்: 673(a)

(அகத்தியர்) வாதகாண்டம் 2-ங் காண்டம்-300

ஏடுகள்: 65. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது.
பக்கத்திற்கு: 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 2000.
அளவு : 30 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

நாகரசம்

காண்டமென்ன நாகரசம் சொல்லக் கேளு
கடியகோ டகசாலை கொடிப்பை வீளி
பூண்டகொடு வேலிசா ரணையின் சாறு
அப்பனே செருப்படிச் சாறுங் கூட்டி
மீண்டசட் டியில்வார்த்து ருகம் வாங்கி
விளம்பியசா ருடன்கலந்து யெரிப்பாய் சாம
மாண்டுவிடும் வலியுமடா கட்டிப் போச்சு
வாதமென்ன யிம்மருந்தை மாட்டு மாரி. 1

முடிவு:

காப்பே(து வாதங் கட)ந்த குரைபாடத்
தாப்பேது சாலத்தைச் சாற்றவே—மாப்பேது
வாதனூல் முன்(னூறு) வகாரத் துரைசரிதான்
வேதமே சொல்லி விளம்பும். 299

வாதகாண்டம் முகிந்தது முற்றும்.
தெட்சணுயன் பாதமே கெதி
முகிந்தது, முற்றும்.

காலம்:

இல்லை

குறிப்பு:

இது, முன் சுவடி போன்றது. இதில் முதற்காண்டம் இன்மையால் அகத்தியர் என்ற பெயர் காணப்படவில்லை.

இதில், வங்க செந்தூரம், சவுக்காரம், எண்ணெய்வாங்க, கரியுப்புக் கட்டு, அறுவகை களங்கம், வெள்வங்க ரசிதம், அப்பிரகம், லோகம் மனவிரம், கிண்ணவகை, ரசசுத்தி, அட்டைபதம், புளி நடலைக்கிழங்கின் வேதை முதலியன உள்ளன.

இதன் தொடக்கத்தில் அட்டவணை எழுதிய ஏடுகள் 2 உள்ளன.

———

வரிசை எண் : 1312 சுவடி எண் : 673 (b)

(அகத்தியர்) வாத காண்டம் 3-ம் காண்டம்

ஏடுகள் : 84. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 2800.
அளவு : 30×3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

முன்னுரைத்த . . . வழிமுத்த கிழக்கு மாந்திரிய
மின்னுரைத்த திங்கள் முட்டும் வேணியாய் – பண்ணுரைத்த
குஞ்சரமே மூல . . . .
கஞ்சமலர்ச் சேவடியே காப்பு.

முடிவு:

வாழ்த்திப்பா ரோடுவகை சொல்வராயே
காமடையணி றக்கமில்லா நிடுபருண்டு
னூல் கொடுத்தால் போகாப் பாவம்
மெத்தவரும் பொருளை யீலாசத்த ருண்டோ.
. . . . 617

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், இடையிடையே ஏடுகள் இல்லை. கடைசியில் முற்றற்றது தெரிகின்றது. இதில் 300 பாடல்களே இருக்கவேண்டும். இதில் 616 செய்யுட்கள் இருக்கின்றன.

இதில், முத்து பற்பம், வாசிக் குறி தப்பினபேர், கள்ளஞானி, உப்பின் பற்பம், பாண்ட கர்ப்பூரம், சூரணம், குப்பி வைப்பு, சவ்வீரம், சடாதாரச் செந்தூரம், பஞ்சகவ்விய லேகியம், நோய் வரலாறு, மேகராசாங்கத் தயிலம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1313 சுவடி எண் : 673 (C)

(அகத்தியர்) வாத காண்டம் 4-ங் காண்டம்

ஏடுகள்: 18(72—89). ஏட்டின் நிலைமை: சிறிது பழுது. பக்கத்திற்கு : 4-7 வரிகள். அளவு : 30×3 செ. மீ. கி .எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: (அகத்தியர்). முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

(முதல் ஆறு பாடல்கள் இல்லை. தலைப்பு இல்லை)

..............படி பூத வீடு
கண்டிடுவாய் சதிரத்தில் மட்டு மப்பா
கருவான நால்மூலை பூதம் வேண்டாம்
உண்டான வகாரத்தில் வட்ட முத்து
உரவான வகாரத்தி லாறு போடு
மிண்டாத் திரிகோணஞ் சிகாரந் தானும்
விஷ்ணுவின் பிரைமகாரம் நகாரம் நாலே. 7

முடிவு:

கருதிக் காரதைகதிப் பார்வை யத்து
சுருதிப் பொருளது சூட்சஞ் சொல்லாதே
மரிமரியெ............
.... 143

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், தொடக்கமும் முடிவும் இல்லை.

இதில், லெக்கம் அன்பத்தொன்று, தூளிவித்தை, யெடுத்தாடும் பாவை, பாம்புவாய்த் தேரை, பல்லிவாய் நூல்பூச்சி, பூனைவாய்எலி, மயில்வாயில் சர்ப்பம், கீரிவாய்சர்ப்பம், மணியன்வாய்ச்சர்ப்பம், ஆந்தை வாய்ச் சர்ப்பம், ரசமணி, வல்லூரு வாய்க்கொக்கு, கரும் பிராந்து, சாவல் வித்தை, அஷ்ட்ட வயிரவம் முதலியன உள்ளன.

இதன் பின்னர் 6 உதிரி ஏடுகள் உள்ளன. இதில் இரும்பியம், துத்தநாகம், லிங்கமெழுகு, காரீயம், ரசபதங்கம் காந்த செந்தூரம், முதலியன உள்ளன.

—❀—

வரிசை எண் : 1314 சுவடி எண்: 673 (d)

அகத்தியர் வைத்தியர்—80

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 60.
அளவு : 30 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர்: (அகத்தியர்). முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

அரன்கயிலை விட்டுநான் தட்சிணத்தில் வந்து
அளவரந்தகோடி சித்தர்முனிவர் ரிஷிகளு மாயி
பரந்ததொரு பொதிகைதனி லிருக்கும் போது
பாடினனூல் வாதமொடு வயித்தி யந்தான்

முடிவு:

ஆகுமநால் காமமுந்தான் அலர்அங் கெரித்து
ஆத்தாளைப் பூசித்து அடுப்பைவிட் டிரக்கி
பாகுபோற் முப்பூவின் குருவினுட மார்க்கம்
வய்யகத்தில் வய்ப்பரிவார் கோடிக் கொண்டு
தாகுபேர் பெருநூலுஞ் சாஸ்த்திரமுஞ் சொன்னேம்
தவறுது குருவழலை சூட்சயிந்த நூலே. 10
குருவாக யென்பதுமே............

காலம்:

இல்லை

குறிப்பு:

இது, சிறந்த நூலாகும். இதில் நல்ல பல வைத்தியங்கள் உள்ளன. இதில், பத்து பாடல்கள் முழுமையாக உள்ளன.

——

வரிசை எண் : 1315 சுவடி எண்: 674 (a)

குணவாகடர்

ஏடுகள் : 20. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது.
பக்கத்திற்கு : 7—9 வரிகள். கி. எண்ணிக்கை : 800.
அளவு : 38 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

(தொடக்கம் இல்லை)

சுபோலக்கண வெத்து பாதுங்குமயாதே
அலத்தும் துஞ்சாதிர அம்பகத்துந்தாள்
சுருங்கிப் பாண்டம் மிகவேர்க்கில்
செஞ்சொல் கிள்ளைமொழி மாதே செப்பாய்.

முடிவு:

யேங்கிய காலிருந்து மூமாகாசம்
பொங்கிய வஞ்சுக்குள் பொல்லாது மூன்றுந்தான்
தங்கிய வாயு சமத்தன் மகாவாதம்.

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், தலைப்பு ஏடு இல்லாததால் இன்னதென்றறிய முடியவில்லை. இதன் தொடர் ஏடுகள் பின்னரும் உள்ளன. ஏட்டெண் இல்லாததால் தொடர் காண இயலவில்லை.

இதில், நீரிபுள்ளுதோஷம், வரபுள்ளுதோஷம், பட்சிகுணம், குளி தோஷம், நீலக்குளி தோஷம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1316 சுவடி எண் : 674 (b)

அகத்தியர் வைத்தியம்–205

ஏடுகள் : 16. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8 வரிகள். கி. எண்ணிக்கை : 500.

அளவு : 38 × 3½ செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

பூரணமாம் மம்மூலம் யோனியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாம் சிரசில் சூடாம்
காரணமாம் நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்து வாய்வுனல்ச் சூலை ரோகம்.

முடிவு:

நிகரில்லா மேகத்தின் தைலம் கேளு
நிசமான சந்தணமி லாமிச் சோடு
வகையான ஆவாரையின் பட்டை யோடு
வகைபத்து பலமாக வாங்கி யேதான்
பிசகாமல் தூணிநீர் யெட்டொன் ருக்கி
பெருமையென்ற கசாயத்தை வாங்கி யேதான்
நகையாமல் நல்லெண்ணெய் நாழி விட்டு
நறுணிண்டி வேர்பலந்தான் சேத்துப் போடே. 106

காலம் :

இல்லை

குறிப்பு :

ஏடுகள் இடையிடையே இல்லை. தொடர்ச்சி சரியில்லை.

இதன் பின்னர், உதிரி ஏடுகளாக 41 உள்ளன. இவற்றில் பக்க எண்கள் இன்மையின் தொடர்புபடுத்த இயலவில்லை.

இது, எமது சுவடி எண் 311(e)/D.566, 323(a)/D. 622 போன்றது.

வரிசை எண் : 1317. சுவடி எண் : 675 (a)

அகத்தியர் 1200-ல் சூத்திரம்-12

ஏடுகள்: 3½ (3—6). ஏட்டின் நிலைமை: மிகப்பழுது.
பக்கத்திற்கு : 7—8 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 26 × 3½ செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

தொடக்கம் :

காரமென்ருல் பல்லியுட கல்லோ காரங்
காரத்தில் கடுங்கார மேர வென்ருல்
சாரமது பூஞக மெடுத்து வந்து
சாதகமாய் சிலத்தாலே ஏழு சுத்தி
வாரமுடன் சிறுநீரா லேழு சுத்தி
மகிழத்தான் வஷ்த்துவி லேழு சுத்தி
சீரான தேசி யமுரி நீரில்
சிறப்பாக ஏழுசுத்தி செய்து பாரே.

முடிவு :

செந்தூரங் குடுப்பதற்கு வகையைக் கேளு
செயப்பெடுத்த வீரமொடு ஆரங் கூட்டி
மருந்துமாம்ஞ் சரக்குரெண்டு பொடித்துக் கூட
அப்பனே கூடவிட்டுக் கலந்து கொண்டு
தந்தரமாயி வெள்ளெக்கொன்று ஒருமாப் போடு
தர்ரணியில் பதிஞறு வயது பிள்ளே
நந்துலவு மாத்தாளே பூசித் தாக்கால்
நாட்டுவாள் வேதெயிட்டு நடத்திப் பாரே. 12

தேவி சகாயம்
முற்றும்.

காலம் :

இல்லே

குறிப்பு :

இது எமது சுவடி எண் 186 (e)/d. 298 சுருக்கம் பனிரண்டு போன்றது.

வரிசை எண் : 1318. சுவடி எண் : 675 (b)

சட்டைமுனி ஐயா நிகண்டு

ஏடுகள்: 7½ (6—13). ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8—9 வரிகள். கி. எண்ணிக்கை : 200.

அளவு : 26 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : சட்டைமுனி ஐயா. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

சோதியெனுந் துரியவெளிக் குருவே அய்யா
சொற்பெரிய கயிலாச மயமே ஞானம்
தாதியே கடவுளே ஞான மார்க்கம்
அந்தரத்தே யென்றுரைத்தால் ஆர்தான் காண்பார்
வாதியென்று பேர்கொண்ட சுந்தரமே அய்யா
வரிசையுடன் யுவர்ச்சாரம் வழலை மாற்கம்
நீதியாய்ச் சொல்லுகிறேன் நினவாய்க் கேளு
நிகண்டுபன் னிரண்டுநூறு நிலைத்திட் டேனே. 1

முடிவு :

ஆமப்பா சுந்தரமே அய்யா கேளு
அண்டத்தின் சுன்னமொடு வாசி மூலம்
நாமப்பா நிகண்டுபன் னிரண்டு நூறும்
ஞட்டினேன் சூத்திரம்போல சோடச மாடி
வாமப்பா ரண்டுகாண்டம் வாதத் துக்கு
மகத்தான சூத்திரமிரு நூறுஞ் சொன்னேன்
காமப்பா சூஷ்த்திரமும் நிகண்டு சோடஷ
சாத்திரமும் பார்த்தவர்க்கே முத்தி யாமே. 53

சட்டமுனி அய்யா சொற்
சூத்திரம் முகிந்தது
முற்றும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 342 (c)/d. 670, 344/d. 673-ன் வேருயது இதில், நிகண்டு பன்னிரண்டு நூறு என்று முதலிலும் கடைசியிலும் கூறப்பட்டுள்ளது. ஆனுல் 53 செய்யுட்களே உள்ளன.

வரிசை எண் : 1319. சுவடி எண் : 675 (c)

மச்சமுனி நிகண்டு-105

ஏடுகள்: 12(14—25). ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8—9 வரிகள். கி. எண்ணிக்கை : 300.
அளவு : 26 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : மச்சமுனியார். முழுமை : குறைபாடுடையது.

தொடக்கம் :

ஒருவ னெருத்தி ஒண்ணிற்ற லொன்றுக்கு
இருவ ரிருந்திட மீரேழு லோகமாங்
கருவுங் குருவுங் கைவண்ண மானதா
லிருவரி லொருவ ரேகாந்த மாச்சே. 8

முடிவு :

ஓதிடறி வாலே யுள்ளஞ் செழுத்தையும்
ஆதியு மந்தமு மாம்நடுப் பூரணஞ்
சோதிய ஞதந் துரிய மிருந்திடம்
நீதியு மின்ன நிகற்றிடு முற்றியே. 105

குருபாதமே கெதியாகவும்
மீனாட்சி துணை

மச்சமுனி 105 நிகண்டு எழுதி முகிந்தது முத்தும்
மனோன்மணி முன்னிற்க வேணும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், முதல் 7 பாடல்கள் இல்லை. இதில் வாசிசித்தி, பஞ்சாட்சர மகிமை, அதன் விளக்கம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1320. சுவடி எண் : 675 (d)

இராமதேவர் வைத்தியம்-81

ஏடுகள்: 20(26—45). ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 9—10 வரிகள். கி. எண்ணிக்கை : 600.
அளவு : 26 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதியிலே யம்மைந்தவிதி யெழுத்தைக் காண
அருளான நந்திபதம் அன்பாய்க் கொ..ண்டு
சோதியென நின்றிலங்கும் நாத ரூபி
சுருதியுள்ள வாலைமனேன் மணியைப் போத்தி
நீதியுடன் சஞ்சாரச் சமாதி செய்து
நின்றனடா ஆதியந்த நிலைக்க வேதான்
வாதியென்றே வந்தோர்க்குக் குருவா மின்னூல்
வாசணித்தே னெண்பதுமே யொன்று மாச்சே. 1

முடிவு :

வணக்கமுள்ள யின்னூலை வெளிவி டாதே
வஞ்சருடன் பேசாதே வா(யா) டாதே
பிணக்கமில்லா மைந்தருட னிணங்க வேண்டாம்
யின்பமுள்ள வயித்தியனூ லீய வேண்டாம்
மணக்குமலர் மதிதனிலே மனத்தை வைத்து
வயித்திய மெண்பதுவும் வகையாய்ப் பார்த்து
தனக்குமிகப் பொருளெனவே வணங்கிப் போற்றிச்
சதாகாலம் பூரணத்தில் சார்வாய் முற்றே. 82

குருவை நமா
மீனாட்சி துணை
ஸ்ரீராம ஜெய்ம்
குருபாதந் துணையாகவும் வேணும்
நன்றாக.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் துருசுகுரு, அஞ்சனம் பாஷாணக்கட்டு, பூரணலேகியம் செம்பு சுத்தி முதலியன உள்ளன.

வரிசை எண் : *1321.* சுவடி எண் : *675 (e)*

சொரூபானந்தர் ஆனந்தக் களிப்பு

ஏடுகள்: *10 (46—55).* ஏட்டின் நிலைமை: மிகப்பழுது.
பக்கத்திற்கு : *9—10* வரிகள். கி. எண்ணிக்கை : *250.*
அளவு : *26 × 3½* சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : சொரூபானந்தர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

ஆனந்தக் களிப்பு

அந்திக்கு முன்வந்தா ளேடே
அதிகால மெய்யனே யன்பாகக் கண்டு
சந்தித்து வையகந் தாங்கி—நாதந்
தாங்கிய பொதி....தன்னுடல் பொதிந்து
விந்துதன் பதியினிற் கூட்டி
அப்புமேல் நின்ற தீபத்தை மேவாதய்யோ.

முடிவு :

பிந்திய பத்தடி யோடே—கூடப்
பேசிடுந் தேவியின் தீட்சைய தாகுந்
சந்தத மோங்காரங் கூடி—யெங்குந்
தானுயி ருந்திடுஞ் சத்தியின் தீட்சை
வந்தகொடி ரேகமுஞ் சித்தி
கற்பமும் யோகமும் சித்தியாந் தெளி. 50

முஷ்த்தும்
குருவே துணே
குமரன் துணே.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது தத்துவத்தை உள்ளடக்கிக் கூறுவது.

வரிசை எண் : 1322. சுவடி எண் : 675 (f)

பதஞ்சலி வியாக்கிரபாத மா படலம்

ஏடுகள்: $1\frac{1}{2}$ (56—57). ஏட்டின் நிலைமை: மிகப்பழுது.
பக்கத்திற்கு : 10 வரிகள். கி. எண்ணிக்கை : 50.
அளவு : $26 \times 3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பதஞ்சலி, வியாக்கிரபாதர். முழுமை : முற்று
முளது.

தொடக்கம் :

அபேதனம்

ஆதியென்றும் பதஞ்சலியார் குளிகை மார்க்கம்
அட்டவித மெடுத்துரைத்த அருமை கேளு
சோதியாந் துருவமதாம் விண்ணில் கேளு
சுந்தரனும் தலையீற்று மைந்த னேடு
பேதியென்ற திங்களது ஏழுக் குள்ளே
பிசகாம லாக்கினையாம் களத்தில் வாங்கி
வேதியென்ற உச்சியிலே தமரைப் போட்டு
விடுமதிலே சூதமதுவிராக னஞ்சு தானே. 1

முடிவு :

பண்ணியே யிக்குளிகை செந்தூரமாய்
பரிவாக தினங்குன்றி உண்ணு உண்ணு
விண்ணிலே மண்டலந்தான் உண்டு பாரு
விரியமடா காயசித்தி விள்ளப் போகா
உண்ணியே வலசலமும் வேதை யாகும்
ஒருகோடி தாம்பூர ரசித மாமே
நண்ணியே சாமாது குளிர்ந்து கொள்ளு
நாதந் தானே. 8

முஷ்த்தும்
குமரன் துணே.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பதஞ்சலி மாமுனியின் குளிகை செய்யும் முறை, அதன் குணம், பலன் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1323. சுவடி எண் : 675 (g)

சிதம்பர விதி-24

ஏடுகள்: 3½ (57—60). ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 9—10 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 26 × 3½ செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக் கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

சின்மயமே அகண்டவெளி மானு தீதச்
சிற்பரையே சற்குணமே தேவா தேவே
(க)ன்மமொடு யோகவிதி நாலுஞ் சொல்லக்
கருணையுடன் சிதம்பரத்தை விரித்துச் சொல்வேன்
தன்மயமாங் குமாரனொடு வீர வாகு
தந்திமுகன் வயிரவனுந் துற்கை யோடு
நன்மைதரு சரசுபதி பூமக ளோடாய்
நந்திமுகன் யென்னுளுங் காப்ப தாமே. 1

முடிவு :

நம்மந் திரந்தரு தம்பன மோகனம் நான்மறையே
மம்மந் திரந்தரு மாரணம் பேதனம் வாகு
யம்மந் திரந்தரு மிரலோக பரலோக வித்துவே ஷணமே. 24

சிதம்பர விதி முத்தும்
அகத்தீசர் கிடாச்ச முண்டாம்.

காலம் :

இல்லை

குறிப்பு:

இது யோக மார்க்கத்தைக் கூறுவதோடு, தம்பனம், மோகனம், மாரணம், பேதனம், வித்துவேஷணம் முதலானவற்றையும் கூறுகின்றது.

வரிசை எண் : 1324 சுவடி எண் : 675 (h)

சிவசுந்தரானந்தர் பாடல்-16

ஏடுகள்: 4 (61-64). ஏட்டின் நிலைமை: மிகப்பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 26 X 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : சிவசுந்தரானந்தர். முழுமை : முற்றும் உளது.

தொடக்கம்:

குளிருக்கு

ஆதிமிக நிறைசட்டை ஞதாக்கள்
பின்சே யென்றே பிள்ளையாக்
கோதி யந்தத் துள்ளி ருக்கும்
சுடரைப் போற்றி சுந்தரமென்ற

முடிவு:

ஆமப்பா நவலோகம் பழுக்கும் பத்தாய்
அப்பனே அல்லாட்டால் மலையி லேறு
போமப்பா கற்பத்தைக் கொண்டு தானே
புகழ்பெறவே சாகாம லிருந்து கொண்டு
ஞமப்பா சிவனடியைப் போத்திக் கொண்டு
ஞதாந்த சட்டமுனி மகனே யென்று
ஓமப்பா வந்தோர்க ளினக்குத் தம்பி
யென்றேனு னளித்திடுவேன் சித்த ராமே. 16

குமரன் துணை.

காலம்: . . . . . .

இல்லை

குறிப்பு:

இதில் மருந்துமுறை கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 1325 சுவடி எண் : 675 (i)

அகத்தியர் வைத்தியம் சூத்திர-திருநீலகண்டம்

ஏடுகள் : 3 (65–67). ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 9 வரிகள். கி. எண்ணிக்கை : 75.
அளவு : 26 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

நாடியதோ ரகண்டபரி பூரணமாய் நின்ற
நகாரமுத்து கிணேசனொடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனும் மென்னைப் பெற்ற
ஆத்தாளும் ஞவுதனில் லகும்கொண் டேதான்
பாடியதோர் வயித்தியம்அன் பதுந்தான் சொல்வேன்
பண்பான புலத்தியனே யின்னூ லோடே
தேடியதோர் பூரணசூஷ்த் திரத்தில் நன்றாய்த்
தீட்சையொடு கருக்குருவுந் திரஞ்சொன் னேனே. 1

முடிவு:

கேளப்பா மருதோணி நாக வல்லி
கெந்தகத்தோ டெருக்கம்வேர் வச்சிர வல்லி
சூளப்பா கரியசீ ரகமு மேலஞ்
சூடனொடு சிறுநீரா லாட்டி மைப்போல்
வாளப்பா முன்சொன்ன செந்தூரம் போட்டு
வளர்ந்தபட தாமரையும் தழுதா ளையுஞ்சூலை
தேளப்பா சிலவிஷங்கள் சிரங்கு குஷ்ட்டம்
தீருமே சாயங்காலம் தீர்த்த மாடே. 9

ஆடவே யின்னமொரு சூச்சங் கேளு
அரிதாரம் வேண்டியதோர்.......

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், செந்தூரம், குளிகை, பற்பம், தயிலங்கள், கிஷாயங்கள் முதலியன பேசப்படுகின்றன.

வரிசை எண் : 1326 சுவடி எண்: 675 (j)

கருவூரார் சூத்திரம்-100 (115)

ஏடுகள்: 25(68-92). ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 9-10 வரிகள். கி. எண்ணிக்கை : 800.
அளவு : 26 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர்: கருவூரார். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

இரும்பிலீயம்

சீர்பெரு வேதாந்த சூத்திரத்தை
தெட்சணு மூர்த்திபாதந் தெளிந்து போற்றி
கார்பெரு மாயியுட பாதம் போற்றி
கயிலாச திருமூலர் பாதம் போற்றி
யேர்பெருகு சட்டைமுனி போக ஞுதர்
பேரின்ப கோரக்கர் பதஞ்சலியு மிக்க
யேர்பெருகு நாதாக்கள் பாதம் போற்றி
யிகல்வான அருள்பொருளா மிந்த நூலே. 1

முடிவு:

பலித்திடவே தாம்பிரத்தின் சுத்தி கேளு
பண்பாகத் தாம்பிரத்தைக் குகைக்குள் வைத்து
பொலிந்திடவே அண்டத்தோல் தூளை யிட்டு
புரளவே செ. . . .தூவித் தூவி
வலித்திடவே பொடிசேர யிட்ட பின்பு
உத்தமனே வீரமது களஞ்சி போட்டு
கெலித்திடவே அண்டத்தோல் மறுபடியும் விட்டு
கிருபையுடன் உருக்கி நன்ருய் வாங்கு வாங்கே. 115

நிமுத்தி பலக்குபடா சூத்திரந்தான் முற்றே.
கருவூரார் சூத்திரம் முற்றும். வேறு
குருபாதமே கெதி.

காலம்:

இல்லை

முடிவு:

இதன் முதலில் 'வாக்குண்டம்' எழுதிய ஏடொன்றுளது. இதில் இரும்பியம், சாரக்கட்டு, அயச்செம்பு, கிண்ணி, களங்கம், ரசமணி, அஞ்சனம், மைவகை, காந்தம், செந்தூரம், தாளகம், செந்தூரம், இரும்பிலீயம், ரசக்கட்டு, அயத்திலீயம், இரும்பு செம்பு, சூதபற்பம், சூதக்கட்டு செந்தூரம், முதலியன உள்ளன.

வரிசை எண் : 1327 சுவடி எண்: 676 (a)

காலாங்கியார் தேவி பூசாவிதி

ஏடுகள் : 23. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 600.
அளவு : $23\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : காலாங்கி முனிவர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

ஓமென்ற கணபதியும் வல்லபையுங் காப்பு
ஓங்காரக் கம்பநுணி சோதி காப்பு
ஆமென்றும் ஊமென்றும் அடங்கி நின்ற
ஆதியந்த மெய்நிறைந்த பராபரமே காப்பு.

முடிவு:

சேறப்பா நாதமதில் அமறி உப்பு
சேர்ந்திடவே நாதமங்கே தெளியும் பாரு
ஆறப்பா அறிவார்கள் தெளிவைக் காணார்
அத்தெளிவை அறியாமல் உலகத் துள்ளே
பாறப்பா நாதமதை வாங்கி மைந்தா
பாசமதை அகத்தாமல் பாவிமார்கள்
நே............. 52

காலம்:

இல்லை

குறிப்பு:

முதல் முகப்பு ஏட்டில் ''வேணியான் சதாசிவத்தில்'' எனத் தொடங்கும் செய்யுட்கள் 2 எழுதப்பட்டுள்ளன.

இதில், காலாங்கியார் அஷ்டகர்மம், வித்துவேஷணம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1328. சுவடி எண் : 676 (b)

அகத்தியர் வைத்தியம்-80

ஏடுகள் : 15. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 300.
பூரணமா முக்காண்டம் புகழ்வாம் முற்றே. 115

ரூமதேவரருளிச் செய்த மூன்றுங் காண்டம்
எழுதி நிறை வெய்தியது.

காலம் :

கீலக வருஷம் தை மாதம் 16-ந் தேதி, அரியாங்குப்பம்
நாராயணசாமி நெட்டெழுத்து

குறிப்பு:

இதில், மும்மூல சூட்சம், மெஞ்ஞான சுட்சம், அமைப்பு விந்துநாத பிலன் அறிய, புண்ணியத்தால் வரும் பிலன், அண்ட பிண்ட சக்கரம்,

மூலவண்டம், மூலத்தின் பெயர், அடி மூலத்தின் பெயர், நடுமூலத்தின் பெயர், முடிமூலத்தின் பெயர், மவுன அண்டத்தில் பிரம்மக் கல்லின் பெயர் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1376. சுவடி எண் : 698 (e)

இராமதேவர் மகாசாலம்-800-நாலாங்காண்டம்

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

சென்மராசி

பூறணிதன் கமலபத மமுர்த பீடம்
போதமய மானபுலத் தீசர் பாதம்
வாரணிசர் வாணிபதம் வாமி பீடம்
மவுனமதில் நிறைந்துநின்ற மயேச்சுரன் பாதம்.

முடிவு :

நீழ்புவியில் தவமுனியே காண்ட மெட்டில்
நின்றிலங்கு சதுர்க்காண்டம் விநோத மாடக்
கேள்விசெய ராமனருள் மொழினூற் சொச்சம்
கிறுபைதரும் சருக்கம்னல் சுருக்க முற்றே. 115

குருவே துணை
ஶ்ரீராமதேவர் அருளிச் செய்த மகாசாலம்
சதுர்க்காண்டம் எழுதி நிறைவேறினது.

காலம் :

கீலக வருஷம் தை மாதம் 20ம் தேதி புதவாரம், பரணி நட்சத்திரம் பூருவபட்சம் இந்தநாளில் அரியாங்குப்பம் வயித்திய நாாராயணசுவாமி தனக்காக எழுதினது.

சுகஸ்த்தலிகிதம்
ஶ்ரீராமதேவர் பாதம் நமஸ்து.

குறிப்பு :

இதில், சென்மராசி சாதனக்குறி, வாரமேழுங்கு ராசிப் பொருத்தம், இராசி ஆறுக்கும் லக்கனம் ஆறு பிரித்து சாதனம், பனிரெண்டு எழுத்துகளும் படு முலத்தில் மாறணமுலம், அநக்கன் காலையில் ரவிபட்சம், பிராணவாசி கலை முதலியன உள்ளன.

வரிசை எண் : 1377. சுவடி எண் : 698 (f)

இராமதேவர் மகாசாலம் 800-ஐந்தாங்காண்டம்

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 42 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

அஷ்ட்ட காண்டத்தில் பஞ்சமுக காண்டத்தில் அஞ்சாவது
சுருக்கமுத லானைமுகன் பதத்தைப் போத்தி
சுழியில் நின்ற சின்மயமா மருளே போத்தி
வருஞானக் குருவினுட கமலம் போத்தி
வாலைமனோன் மணியின்பத மடியேன் போத்தி

முடிவு :

தனியநின்று நடனமிடும் வேதாந்த காலம்
சாலமதாய் ஆய்ந்துயின்னூல் சுருக்க மஞ்சாய்
வனியகுல மறவர்வர்க்கம மென்மேல் வாழ்க
வசனித்தேன் செகச்சால வாழி முற்றே.

ஸ்ரீராமதேவர் திருவாய் மலர்ந்தருளிய மகாசாலத்தில்
அஞ்சாங் காண்டச் சுருக்கம் எழுதி
நிறைவேறியது
வாணிபதம் நமஸ்த்து

காலம்:

கிலக வருஷம் தை மாதம் 22-ம் தேதி அரியாங்குப்பம் குட்டைய கிருமணி குமாரன் நாராயணசுவாமி சுகஸ்த்தலிகிதம்
ஸ்ரீராமசெயம்
சிவமயம்

குறிப்பு:

இதில், தன்னை வணங்கிக் குளிசம், வயிரவ தியானம், எரியோந்தித் தயிலம், வல்லூர், ஆந்தை, காக்கை, கோழி, மயில், எதிரி சத்துரு மரணம், ஞேய்களுக்குத் தயிலம், குளிகை விபரம், பாஷாணக்கட்டு, வீரக்கட்டு, தங்கசெந்தூரம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1378. சுவடி எண் : 698 (g)

இராமதேவர் மகாசாலம்-800-ஆறுங் காண்டம்

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

செகச்சால வாணியருள் பாதம் போற்றி
தெட்சணு மூர்த்தியெனுங் கமலம் போற்றி,
அகமேவும் புலத்தீசர் பாதம் போற்றி
அண்டபிண்ட மிரண்டுமுட அருளே போற்றி

முடிவு :

நித்தசித்தி முரைப்பதுவும் நிராசை யானேர்
நேசம்வைத்து யுணர்வதின்னூல் நெறியுங் காட்டும்
அத்தனெனை யாண்டகுரு பதத்தைப் போத்தி
ஆறுவது காண்டமரு ளதீத முற்றே. 116

ருமதேவ ரருளிச் செய்த ஆறுங் காண்டம்
யெழுதி நிறைந்தது முற்றும்.
ஸ்ரீருமசெயம்

காலம்:

கீலக வருஷம், தை மாதம், 22-ம் தேதி நாயத்துக்கிழமை திருவாதிரை நட்சத்திரத்தில், அரியாங்குப்பத்திலிருக்கும் குட்டையக்கிருமணிக் குமாரன் நாராயண சுவாமி எழுதிய சுகஸ்த்த லிகிதம்.

அம்பாள் துணையுண்டாகவும்

குறிப்பு:

இதில், காயாதி கற்பம், சக்தி மவுனம், சிதம்பர சக்கரம், வயிரவர் மூலம், அஷ்ட்டமூலம், அஷ்ட்ட நாகம், அஷ்ட்ட பாலார் சிதம்பர பூசை, அஷ்ட்டமா சித்து தயிலம், அஷ்ட்டமா சித்தில் சாலவித்தை முதலியன உள்ளன.

வரிசை எண் : 1379. சுவடி எண் : 698 (h)

இராமதேவர் மகாசாலம்-800 ஏழாங் காண்டம்

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

சத்தகாண்டச் சருக்கம்

அதிவிதமாய் நின்றபரம் பாதத்தாள் போத்தி
அண்டபிண்டம் பிரமாண்டம் அருளே போத்தி
மதியில்நின்று நடனமிடும் றவியே போத்தி
மகிழ்ந்துயெனை யாண்டகுரு பரனே போத்தி

முடிவு:

பேறுபெற சின்மயத்தின் பெருமை வேணும்
பெரியோர்கள் பதம்பணிந்து பிழைக்க வேணும்
கூறுடைய மகாசாலக் காண்டம் எட்டில்
குறிப்புடைய சத்தகாண்டங் குருவா முற்றே. 117

குருவே துணை
ஸ்ரீராமதேவரருளிச் செய்த மகாசாலக்காண்டத்தில்
சத்தகாண்ட சாலம் எழுதி முகிந்தது.

காலம் :

கிலக வருஷம் தை மாதம் 27-ந்தேதி சோமவாரம் புனர்பூச நட்சத்திரத்தில், அரியாங்குப்பமிருக்கின்ற கங்கைகுலத் துற்ப வித்த வயித்திய நாராயண சுவாமி சுகஸ்த்த லிகிதம்

ஸ்ரீராமசெயம்

சிவமயம்

குறிப்பு :

இதில், நவரசக்குளிகை, நவரத்தினமறிதல், வாசிநிலை, அட்டாங்க யோகம், அம்பிகாயோகம், அண்டபிண்டக்குறியறியவும், கற்ப முண்ணும்படி, சிவயோகம் தியானம், மவுனம், பிராணய பெந்தம், நாடி நேர்மை, நூல்த்துகை, ஆயிரத்து சொச்சம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1380 சுவடி எண் : 698 (i)

இராமதேவர் மகாசாலம்-800 எட்டாங்காண்டம்

ஏடுகள் : 17. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை: 700.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

அஷ்ட்ட காண்டம்

குருமுனிவர் பதம்போற்றிக் கிணேசன் பாதம்
கூர்ந்துநின்ற புலத்திசர் அருளே போத்தி
மருவுபுகழ் வாலைமனேன் மணியைப் போத்தி
மருவியெனை யாண்டபரா பரையின் போத்தி

முடிவு :

கழிவுமில்லாக் கருவிகர ணுதி நேர்மை
காயசித்தி தேகசித்தி யாகும் நேர்மை
வழிபலவா மகாசால மஷ்ட்ட காண்டம்
வசனித்தோம் பிருணய வகுப்பா முற்றே. 116

மகாசாலம் எண்ணூறில் அஷ்ட்ட காண்டம்
எழுதி முகிந்தது முற்றும்.
சுப்புராயர் துணையாகவும்.

காலம்:

கீலக வருஷம் தை மாதம் 28-ம் தேதி சுக்கிர (வெள்ளி) வாரம், பூர நட்சத்திரத்தில், அறியாங்குப்பம் குட்டைய கிருமணி குமாரன் நாராயண சுவாமி சுகஸ்த்தலிகிதம்
ஸ்ரீராமதேவர் பாதமே நமஸ்த்து

குறிப்பு :

இதில், புலத்தியர் இராமதேவருக்கு அனுக்கிரகம் பண்ணினது, சர்ப்பயாகம் படுபட்சி, மாரணக்கருவி, சிறியா நங்கை குளிசம், அம்பு, குண்டு, வெட்டருது, படைவிலங்கும், எதிரி மாரணம், கெந்தகத்தயிலம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1381. சுவடி எண் : 698 (j).

இராமதேவர் சோசிய சூத்திரம்-17

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 42×3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

அண்டரண்டம் நிறைந்தபொருள் வேத மான
ஆயிரத்தெண் க(ம)லபீட மருளே போத்தி
பிண்டமென்ற கருக்குருவாம் பதினெண் பேர்க்கு
பிரபல்லிய மானபரப் பிரமம் போத்தி

முடிவு :

ஞமப்பா யின்னூலே துலாத்தின் ராசி
நளினமென்ற பிறவியோர்க்கு யெய்தும் பாரு
வாமப்பால் சொரிந்துவிடும் ரூமன் வாக்கியம்
வ்சனித்தோம் சோசியந்தான் வாழ்வீர் முற்றே. 17

துலாராசி யுடையோர்க்கு பலன் சொல்லிய சோசியம் 17
முகிந்தது முற்றும்.

காலம் :

அரியாங்குப்பம் நாராயணன் சுகஸ்த்த லிகிதம்
கீலக வருடம் பங்குனி மாதம் 6-ம் தேதி எழுதியது
ஸ்ரீராமதேவர் பாதமே துணே.

குறிப்பு:

இதில் துலாராசிக்கான பஞ்ச பலன்கள் கூறப்பட்டுள்ளன. வருஷ பலன், மாத பலன், யோக பலன், வாய்வுபலன் முதலியன உள்ளன. பிற ராசிகட்கான பலன்கள் இல்லை.

வரிசை எண் : 1382 சுவடி எண்: 698(k)

இராமதேவர் பாஷை பதினெட்டு

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8 வரிகள். கி. எண்ணிக்கை : 180.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

அண்டாண்டம் நிறைந்தகுண் டலியின் பாதம்
அருள்பெருகும் கிணபதியின் அருளே போத்தி
மண்டலங்கள் மூன்றுரவி மதியாய் நின்ற
மதியிரவி சுழிமுனையின் கமலம் போத்தி

முடிவு :

முன்னேமே மோட்சமது எய்தும் எய்தும்
மூதண்ட சாயுச்சிய முத்தி வாழ்வா
ரன்னேமே ருமனப்பா யின்னூல் பாரு
நவகோடி கோடாகோடி வாழ்ந்தோர் முற்றே. 27

ருமதேவர் பாஷை பதினெட்டும்
எழுதி முகிந்தது முற்றும்.

காலம் :

கீலக வருஷம் பங்குனி மாதம் 7-ந்தேதி அரியாங்குப்பம் நாராயணசாமி வயித்தியர் சுகஸ்த்த லிகிதம்.

ஸ்ரீராமதேவர் பாதமே துணையுண்டாகவும், வேணும்
திருச்சிற்றம்பலம்

குறிப்பு :

இதில், இராமதேவர் பாஷை 18 க்கும் 27 சூத்திரங்கள் இருக்கின்றன. இந்நூல் எழுதியவர் பாண்டிச்சேரி அரியாங்குப்பத்தைச் சேர்ந்தவர். இதில் சிவயோகம், அதீத வித்தை முதலானவற்றைப் பேசுகிருர்.

வரிசை எண் : 1383. சுவடி எண் : 698 (1)

இராமதேவர் சோசியம் பத்து

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : மிகவும் பழுதுபட்டநிலை.
பக்கத்திற்கு : 7—8 வரிகள். கி. எண்ணிக்கை : 80.
அளவு : 42 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

ஆதியிலே வேதியன்ருன் அன்பாய்ச் சொன்ன
அருமறையின் பொருளான சோசி யத்தை
சாதியிலே முதலானுர் மனவாக்கியம் தவருமல்
சற்குருவின் ... ...போத்தி

முடிவு:

தாமென்ற சனியாண்டு ரெண்டரையாய் நிற்கும்
தயவான வியாழமோ ராண்டு நிலையாகும்
நாமென்ற நாகங்க ளிரண்டும் ரெண்டரையாம்
நடுவான கிரகநிலை நலமறிய முற்றே. 11

ஶ்ரீமதேவரருளிச் செய்த சோசியம் பத்து
மெழுதி நிறைவேறியது.

காலம்:

கீலக வருஷம் பங்குனி மாதம் 8-ம் தேதி அரியாங்குப்பம் நாராயணன் சுகஸ்த்த லிகிதம்.

குறிப்பு :

இதில் சோதிடம் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 1384. சுவடி எண் : 698 (m)

இராமதேவரருளிச்செய்த பெருநூல் ஆயிரம்

ஏடுகள்: 143(205-347). ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8 வரிகள். கி. எண்ணிக்கை : 6000.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

அண்டமெனுங் கேசரியாள் பாதங் காப்பு
அருள்பெருகும் பூரணத்தி னறிவே காப்பு
குண்டமெனுங் குண்டலியின் குறியே காப்பு
குருவான பராபரத்தின் குணமே காப்பு
மண்டலங்கள் மூன்றுமொன்ருய் நிறைந்து நின்ற
மகத்தான ரவிமதியின் சுடரே காப்பு
பிண்டமெனும் பொருளான அண்ட பிண்டம்
பேரண்டம் நிறைந்தகண பதியே காப்பு. 1

முடிவு:

வாதகலும் ஞானமுறும் வசிய மாகும்
மகத்தான பூரணமும் பூரணமே யாகி
நாதமுடன் நாதமதா யொடுங்கி நின்ற
நாதாந்த சிவயோகிப் பாத முற்றே. 1000

ருமதேவரருளிச் செய்த வாத காவியம் ஆயிரமும்
எழுதி நிறைவேறியது.
குருவே துணை

காலம்:

சவுமிய வருஷம் சித்திரை மாதம் 11-ம் தேதி மந்தவாரம் மதியம் பனிரெண்டு மணிக்கு முகிந்தது. அரியாங்குப்பம் நாராயணசர்மி சுகஸ்த்த லிகிதம்.

குறிப்பு :

இதில், வெள்ளைக்கல் அண்டம், கற்பூரக் கட்டு. துருசிச் சுன்னம், யோகநிலை ஞானம், திருமூலர் மார்க்கம், சட்டைமுனி மார்க்கம், போகநாதர் மார்க்கம், கருவூரார் கொங்கணவர் மார்க்கம், சுந்தரானந்தர் மார்க்கம், மச்சமுனி மார்க்கம், இடைக்காட்டார் மார்க்கம்,

அழுகண்ணிச் சித்தர் மார்க்கம், சிவவாக்கியர் மார்க்கம், வாசுதேவர் தெரிசனம், திருமூலர் தெரிசனம், போகநாதர் தெரிசனம், சுந்தரானந்தர் தெரிசனம், மச்சமுனி தெரிசனம், இடைக்காட்டார் தெரிசனம், பிரம முனி முறை, பரப்பிரம்ம பீடம், மானிடர்கள் செய்யும் கிரிகை முதலியன உள்ளன.

வரிசை எண் : 1385. சுவடி எண் : 698 (ந).

இராமதேவரருளிச் செய்த சிவயோகம் இருநூறு

ஏடுகள்: 29. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7—8 வரிகள். கி. எண்ணிக்கை : 1200.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர்: இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

சிவசக்தி பூசை

மூலமெனு முதற்பொருளாய் முத்தி நடுவணையில்
மூதண்ட மானதொரு பிர்ம்மத்துக் கப்பால்
ஞாலமெனுந் தலமுடைய சத்திபதி மேலே
நாதாந்தப் பெருவெளியின் கீழே

முடிவு:

பத்தாசை கொண்டுமன மவுன மாக
பதிவாக சிவயோக மிருனூறு பாரு
வித்தான விரையமது அத்துப் போகும்
மேலான சிவயோகம் விளங்கு முற்றே. 200

இராமதேவர் சிவயோக மிருனூறும்
எழுதி முகிந்தது முற்றும்.

காலம்:

சவுமிய வருஷம் சித்திரை மாதம் (?) மங்கள வாரம் மக நட்சத்திரத்தில் அரியாங்குப்பம் நாருயணன் படிக்கின்ற சாஸ்த்திரம் சுகஸ்த்த லிகிதம்.

இராமதேவர் பாதம் கதியுண்டாகவும்

குறிப்பு :

இதில் சிவசக்தி பூசை, குருநிலையறியவும் பூசை விழி சக்கரம், ஆசான் மகிமை, பூரணவிலாசம், அண்டசற்பம், கட்டுக்கொடி மை, பூரக்குழம்பு வேதை, நூல் தொகுப்பு பார்க்கும் முறை, மதியமுர்தம், கற்பத்துக்குப் பத்தியம், அரிதாரச் சுன்னம், அயக்களங்கு முதலியன உள்ளன.

வரிசை எண் : 1386. சுவடி எண் : 698 (0)

இராமதேவர் அருளிச்செய்த பலதிரட்டு அன்னூறு

ஏடுகள்: 69(377-445.) ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். கி.எண்ணிக்கை: 2100. அளவு: 42 x 3 செண்டி மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

ஆதியந்த மெய்நிறைந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தின் அறிவில் கூடி
பாதியா முப்பொருளு மூன்று மொன்றாய்
பரைவெளியாய் நின்றபரா பரையின் பாதம்

முடிவு:

செய்யாதே தீவினைதான் கொடிது பாவம்
செந்துவெல்லா மீசனென்று தெளிந்து காணு
மெய்யான குருபதத்தைப் பணிந்து போத்தி
விளங்கினேன் கருக்கிடை சூத்திரந்தான் முற்றே. 523

முற்றும்

காலம் :

சவுமிய வருஷம் வைகாசி மாதம் 18-தேதி மங்கள வாரம், ருமதேவர் பலதிரட்டு சூத்திரம் 523.அரியாங்குப்பம் குட்டைய கிருமணி குமாரன் நாராயணசாமி யெழுதின சுகஸ்த்த லிகிதம்,

குருபாதமே துணையுண்டாகவும்.

குறிப்பு:

இதில் சவுக்கார வழலை, வெடியுப்பு, கடுங்காரம் செயநீர், ரசக் கட்டுக் குளிகை, துருசுச் சுன்னம், கெந்தக மெழுகு, கருவங்கக்கட்டு, ரசப்பதங்கம், அண்ட வழலை, தங்கச் சுன்னம், அஷ்ட்ட கர்மம், சமித்துகிறிகை, சிமிள் வித்தை, மருந்தீடு முறிய விஷவித்தை முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 365 (*b*)/*D*, 727 இராமதேவர் சூத்திரம் 500 போன்றது. அதில் 521 செய்யுட்களிருக்கின்றன ஆனால், எமது சுவடி எண் 324 (*e*)/*D*. 640 இராமதேவர் சூத்திரம் 215 என்ற தலைப்பிலும் தொடக்கம் முடிவு ஒன்ருக உள்ளன,

———

வரிசை எண் : *1387* சுவடி எண்: *698 (p)*

இராமதேவர் வகார சூத்திரம் பத்து

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8—9 வரிகள். கி. எண்ணிக்கை : 50.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

காணப்பா யேரியிலே விளைந்த பிண்டம்
கடிதான மாங்கிஷத்தோ டெடுத்து வந்து
பூணப்பா பொரிக்காரம் பொரித்துக் கொண்டு
பிண்டத்தை வாய்பிளந்து அதனுள் போட்டு
ஆணப்பா பெண்ணேடே கூடி ஞப்போல்
அப்பனே ஞதமங்கே யிரங்கும் பாரு
தாணப்பா லோகத்தோர் சட்டி யொன்று
சாதகமா யிணங்கனையு மதியிலே போடே 1

முடிவு:

நாடெல்லாந் திரிந்தாலு மிந்தப் போக்கு
நல்லமுறை யிதுபோலே யெங்கு மில்லை

பாடல்போல் சொன்னதென்று யெண்ண வேண்டாம்
பாருமே சூத்திரத்தின் பாடல் முற்றே. 10

முத்தும்

அரியாங்குப்பம் நாராயணசாமி சுகஸ்த்த லிகிதம்.

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், வாதம் செய்வதற்கான சிப்பி, செயநீர் முதலியன கூறப் பட்டுள்ளன. இது எமது சுவடி எண் 289 (a)/D. 513 போன்றது. பாட வேறுபாடுகள் நிறைய உள்ளன.

வரிசை எண் : 1388. சுவடி எண் : 699 (a)

அகத்தியர் அட்டவணை வாகடம்

ஏடுகள் : 160. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 5000.
அளவு : 37 × $3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : குறைபாடுடையது.

தொடக்கம் :

அகஸ்த்தியமுனி அருளிச்செய்த அட்டவணை வாகடம் குறி தெரிஞ்ச புண்ணியவான்கள் அறிந்து செய்தால் விஷையங்கள் சரியாயிருக்கும்.

நிலவாகை கற்பம்

நிலவாகை சற்மூலமு கொண்டுவந்து நிழலுலத்தி
பொடிசெய்து குடுக்கையில் அடைத்துக் கொள்ளவும்.

முடிவு :

மாருத பிரமியங்கள், சூலை, அக்கினி மாந்தம், வாயியூறல், பித்தம், சுக்குரவாயுவு, அண்டரோகம் யிவையெல்லாந் தீரும். பத்தியம் கறிப்பு, புளிப்பு, புகையிலை தள்ளவும். இந்த லேகியத் தைப் புதுக் கலயத்தில் அடைத்து வைக்கவும்.

காலம்:

இந்த அட்டவணை வாகடம் ஆங்கிர வருஷம், வையாசி மாதம், சோமவாரம் சதுர்த்தேசி உள, பூச நட்சத்திரம் 1½ நாழிகைக்கு தாத்தாச்சாரியார் சிஷ்சையாகிய-சாத்தாப்பாடி வெண்ணுமாலை அய்யர் வம்முஷமாகிய முத்துசுவாமி அய்யர் குமாரன் சின்னய்யர் வாசிக்கிற வாகட பொஸ்த்தம். யிது சரமணந்தோப்பு முகட்டில் எழுதி முடிந்தது.

சாரதாம்பாள் துணையாகவும்
சின்னய்யர் கைஒப்பம்

குறிப்பு :

இதில், 127வது ஏடு இல்லை இதில் ஆவாரை கற்கம், தேத்தாங் கொட்டை கற்கம், யெட்டி மாத்திரை, அவுத்துவாய்க் கட்டைக் கனுபானம், கண்டாமிருகத்துக் கனுபானம், கண்டங்கத்திரி லேகியம், மேகவெட்டைக்கு எண்ணெய். சகலவிட்புரு திச்கு, டண்ணுச்கு கிரந்திக்கு எண்ணெய் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1389. சுவடி எண் : 699 (b)

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 40. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 1000.
அளவு : 37 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர் முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

சகலமேகத்துக்கு மருந்து

ஆவாரையிலையை அரைத்து வாழையிலையில் வைத்து சுட்டு தேனிலே பாக்களவு உள்கொள். குணமாகும்

வேறு

நெய்சட்டிவேர் நல்லெண்ணெயில் எரித்து காதுக்கு வாற்கவும்.

முடிவு :

கார்போக அரிசி பரங்கிப்பட்டை
செங்கதாரிப்பட்டை நேர்வாளம்
உள்ளி வசம்பு வகைக்கு வராகனெடை 1
அரைத்துக் கரைத்து மெழுகுபதத்தில்
வடித்து ஒருகரண்டி குடுக்க பதினெட்டு
கரப்பானும் சூலேக்கட்டு, கிரந்திகள், தீரும்
இச்சாபத்தியம்.

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில் வெவ்வேறு வைத்தியங்கள் உள்ளன. சகலமேகத்துக்கு மருந்து, செவுட்டுக்குப் புகை, சகல ரெத்தக்கழிச்சலுக்கும் மருந்து, பிறவாது யிசுவுக்கு, கழுத்து யிசுவுக்கு, தயிலம், லிங்க குன்மம் தேங்கா லேகியம் முதலியன உள்ளன.

இரண்டு ஏடுகளில் மோட்சதீபச் சிலவுக் கணக்குகள் உள்ளன.

வரிசை எண் : *1390.* சுவடி எண் : *700 (f)*

அகத்தியர் சுருக்கம்--பதினாறு

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 18 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

பூரணமாய் நின்றதொரு அய்யர் பாதம்
போத்தியே யென்னுளும் புவியின் மீது
காரணமாய் நின்றதொரு ஆயி தன்னைக்
கண்மூக்கு மத்தியிலே கருதிப் பாரு
ஆரணமாம் ஆகாசம் லோகம் லோகம்
அடுக்கடுக்காய் நின்றதொரு அறையைக் காண

வாரணத்தின் முகத்தோன்றன் பாதந் தன்னை
மனதில்வைத்து என்னாளும் மகிழ்ந்திட் டேனே. 1

முடிவு:

வாசிப்பாய் தோத்திரவு கோடா கோடி
மனோன்மணியே மாதாவே மலையின் கண்ணே
யோசிப்பாய் மந்திரங்க ளனந்தங் கோடி
உத்தமியாள் பதபூசை யுகந்து தானால்
ஆசிப்பாய் அதின்பிறகு ஆத்தா ளந்த
ஆனந்த பூரணத்தில் அருமை தானே. 17

சிவமயம்
குருவே துணையாகவும்

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், மாய்கை, பொய், சோபம் மூன்றையும் தள்ள வேண்டும், வேதாந்தம், பின்பமென்ற மூன்றெழுத்து, ஐந்தெழுத்து, முப்பத்திரண்டு பேரின்பம், பஞ்சாட்சர விளக்கம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1391. சுவடி எண் : 701

சில வாகட முறைகள்

ஏடுகள்: 31. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5-8 வரிகள். கி. எண்ணிக்கை : 500.
அளவு : $21\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

கெந்தகம் துரிசு விராகனெடை 1
நவச்சாரம் சதுரக்கள்ளிப்பால்
வெங்காரம் கொண்டுவந்து பூனீறு
அரிதாரம் அதிலே போட்டு

வகைக்கு விராகனெடை—1 90 நாழிகை வச்சு
தெளிந்தவுடனே அந்த நீர் விட்டு

முடிவு :

ரசக்குளிகைக் கட்டு

ரசம் சுத்திபண்ணி விராகனெடை 10யெடுத்துத் துளசிச் சாறும் குப்பமேனிச்சாறும் சுருக்கு குடுத்து கய்யான் தகரைச் சாறும் குப்பமேனிச் சாறும் விட்டு ரெண்டு சாமம் அரைத்து துளசியிலை சாறு, மாகாணி யிஞ்சி யிலைச்சாறும் மாகாணி, சுன்மாச்சட்டி சாறு மகாகாணி . . . .

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், குருமுறை, கிண்ணிமுறை, செப்பு நெருஞ்சி வகை செந்தூரம், தாம்புர சுத்தி, சாதிலிங்கக்கட்டு மெழுகு, மனேசிலைக்கட்டு துத்தக்கட்டு விபரம், தலைமுடிச் சுன்னம், அண்டச் சுன்னம், நாகரச பற்பம், வெள்ளீயப்பானம், ரச செந்தூரம் முதலான தலைப்புக்கள் உள்ளன.

———※———

வரிசை எண் : 1392. சுவடி எண் : 702

அகத்தியர் வைத்தியர்--ஆயிரத்தைந்நூறு

ஏடுகள் : 240. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 10000.
அளவு : 34 × 4 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

வாகுடன் கிணேசன் பாதம்
பணிந்துமுக் குணங்க ளாக
வாகடச் சுவடி யெல்லாம்
வகைவகையாய்த் தொகுத்துப் பார்த்து

ஆகம விதியி னூலா
லடர்ந்திடும் நோய்கட் கெல்லாம்
போகநல் மருந்து சொல்வோம்
புலத்தியாப் பொருந்திக் கேளே. 1

முடிவு :

ஆமப்பா புலத்தியனே சொர்ன்ன கால
வயிரவத்தை யறையுரேன் நன்ருய்க் கேளு
வாமப்பா தங்கமிரண்டு களஞ்சி தன்னே
அகலமாய் லேசாகத் தகடு தட்டி
ஆமப்பா சாதிலிங்கம் களஞ்சு நாலு
அதுவுடனெவட் சவ்வீரம்வெண்காரம் மணியம் வாங்கி
ஆமப்பா சுத்திசெய்த தகட்டுக் குள்ளே
.... 1486

காலம் :

இல்லே

குறிப்பு :

இதில், சூதசுத்தி, கெந்தக சுத்தி, மனேசிலே சுத்தி, தாளக சுத்தி, தாம்பூர சுத்தி, நேர்வாள சுத்தி, மண்டூரச் செந்தூரம், பூபதிமாத்திரை, மாமேக ரசம், முசல் நெய், வாயில் மூக்கில் ரெத்தம் விழுகிறதுக்கு நெய், சன்னி வகைக்கு கலிக்க மாத்திரை, பரங்கிப்புண் குஷ்ட்டம், வெட்டைக்கு ரசாயனம் முதலியன உள்ளன,

இது, எமது சுவடி எண் 301 (*h*)/*D*. 5:9 போன்றது.

வரிசை எண் : 1393. சுவடி எண் : 703(a).

நாடிப் பரீட்சை

ஏடுகள் : 11. ஏட்டின் நிலேமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 500.
அளவு : 37 × 4 சென்டி மீட்டர்- எழுத்து : மணிப்பிரவாளம்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றும்

தொடக்கம்:

கராம்ஸ ஷ்டேஷு மக்ர மூலேஹஸ்புட....
பரீட்சணம் வாத பித்தாதி ரோகானும்
சாத்யா அசாத்யஞ்ச ச்ருதனுது என்றது

முடிவு :

சன்னிபாத ஜ்வரம்

இது இரண்டுங் கூடப் பத்து. இந்தப் பத்தும்
.............சொல்லப்படும் என்றவாறு.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, மணிப்பிரவாள நடையில் வடமொழியும் தமிழுமாக, கிரந்த எழுத்தும் தமிழெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளது.

இதில் வாதஜ்வர லட்சணம், பித்தஜ்வர லட்சணம், சன்னிபாத ஜ்வரம் முதலியன சொல்லப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1394. சுவடி எண் : 703 (b)

சதசுலோகீ--ஜ்வர சிகிச்சா

ஏடுகள் : 14. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 600.
அளவு: 87 × 4 சென்டி மீட்டர். எழுத்து: மணிப்பிரவாளம்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

ஸ்ரீநாத......ஜ்வராதி..............
..........ஜ்வரஸ்யா ஆமுஸ்தா பற்பட
தன்யாஷ்ட்டய.........விஷ்வா.

முடிவு :

அக்னிகோடி வேலி ஜம்பூத்ரும....பர்வனரிணுவல
இவையள் வயற்று விப்புருதியைச்
சமிப்பித்தம்

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில், 12 முதல் 21 வரை ஏடுகள் இல்லை.

இதில், வடமொழியும், தமிழும் கலந்து கிரந்தம் தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன.

இதில், சீதசுரம், ரத்தபித்த சிகித்சா, ப்ரதா சிகித்சா, அஸ்திஸ்ராப சிகித்சா, அ்ரோசக சிகித்சா, கிரகணி சிகித்சா முதலியன கூறப்பட்டு உள்ளன.

வரிசை எண் : 1395. சுவடி எண் : 703 (c).

சந்தனாதித் தயிலம் முதலியன

ஏடுகள்: 16. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 37 × 4 சென்டி மீட்டர். எழுத்து : மணிப்பிரவாளம்
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

உசிர சந்திரனாதித் தைலம்

உசிரம் சாரிப..................
சைவாமுக்தாமலக சம்யுதம் கலுசித......
சைவாக்ரி பேரஞ்ச இனம் ததா
அஷ்வ கர்வ பலா பில்வ மபுண்யரீகம்
ததைவ ச.

முடிவு:

ஸ்வயம் ஸ்ரீரஸோ நாம அஷ்ட்டகுல்ம
ஹரம் பரம் அதீதிஷ்டாத ஜாந்த்ரோஹான
நாஷயேந் நாத்ர சம்சய :

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், பலவகை சந்தனாதித்தயிலங்கள் கூறப்பட்டுள்ளன. வடமொழியும், தமிழும் கலந்த, கிரந்தம், தமிழ் ஆகிய எழுத்துக்கள் கலந்த சுவடியாக உள்ளது.

வரிசை எண் : 1396. சுவடி எண் : 703 (d)

குணபாடம்

ஏடுகள்: 5(56-60). ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 200.
அளவு :37 × 4 சென்டி மீட்டர். எழுத்து : மணிப்பிரவாளம்
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

எலுமிச்சம்பழத்தின் குணம்

அப்யங்கே அகில தேஹ சௌக்ய ஜனனம்
வைத்யோத்ரி, பேதோவிம்.

முடிவு:

சர்க்கரையின் குணம்

தீப நிஸ்வாச காசாஞு நாஸணீ சர்வதோஷ :
தீட்சய ஹரோதீபன : சர்வரோகஜித் ।

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில், எலுமிச்சம்பழத்தின் குணம், பசுவின் மோரின் குணம், மோரில்மேல் சரக்கு கூடுகிற குணம், இளநீரின் குணம், சர்க்கரையின் குணம் ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 1397. சுவடி எண் : 704

அகத்தியர் கரிசல் முன்னூறு

ஏடுகள் : 190. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 4 வரிகள். கி. எண்ணிக்கை : 3000.
அளவு : 41 × 2½ சென்டிமீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

பூறண மாமக ளறுள்பு தல்வன்
காரணி மாமதக் கரியடி பணிவாம் 1
அமுற்த மதியணி சடையினர் விடைய
ரேமத களணை யடிபணிவாம்.

முடிவு :

வாதமும் பித்தமும் வடிவுடன் நல்லது
காதலாய் விந்து கணக்குட னிறுகும்
யிறுகும் நரம்பு யிதமுடன் பச்சையாம்
குறுகுமே யெல்லாம் குணமுடன் தீரும்

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில், ஈசுபரி வணக்கம் சூதக்கட்டு, சகல நோய் தீர, வாததுகை, அவுடத லக்கணம், குருபத்தி வணக்கம், பாதரசபற்பம், பஞ்சசூத செந்தூரம், கெந்தக பற்பம், அய பற்பம், கோடாசொரி, வீரசெந்தூரம், நவலோக சுத்தி, சீனரச கற்பூரம் முதலியன உள்ளன.

இது, மூன்று பத்திகளாக எழுதப்பட்டுள்ளது. பாட்டெண் இல்லை. பிழைகள் மலிந்து கிடக்கின்றன.

இது, எமது சுவடி எண் 16/D. 18 போன்றது.

வரிசை எண் : 1398. சுவடி எண் : 705.

வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 115. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—7 வரிகள். கி. எண்ணிக்கை : 1500.
அளவு : 30 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர்: பலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

சச்சி வாய்வுக்கு தைலம்

தில்லெ தயிலம் வாங்கி மேல்க்குப் பூசவும்: உள்ளுக்குக் குடுக்கவும். வாய்வு விட்டுப் போகும். கய்யி கண்டது. இச்சா பத்தியம்.

கல்னூர் புஷ்பம்

கல்னூர் சுண்ணும்பு கொளம்பில் தோச்சி
துணி சீலையில் அடுக்காய் வைத்து சுருட்டி

முடிவு :

அரைப்பு கிழசம் சந்ததுள் லவுங்ம் கிழசம் வைத்து ஒரு சாமம் அறைப்பது. சீருப்பிள் போல் குளிகை செய்து சுறங்களு சனக்கி தோஷத்த மூலப்பா தேன் அனுபானம் பிளி சுட்டு போடவும்.

காலம் :

இல்லை.

குறிப்பு:

இதில், சூட்டைப்பத்தின பித்தசன்னி நசியம், தாளிசச் சூரணம், தீபனம், உஷ்ண வாயுவுக்கு, பஞ்சகாச இருமலுக்கு லேகியம், ஸ்ரீகளுக்கு மருந்து, தீராத ரெணமானுல் உப்பை போட வயணம், வெள்ளோக்காளம், பித்தசூட்டினுல் மலந்தீய்ந்தால் லேகியம் முதலியன உள்ளன.

வெவ்வேறு கையெழுத்துகள் உள்ளன. மூன்று பத்தியாக சில ஏடுகள் எழுதப்பட்டுள்ளன. பிழைகள் அதிகமுள்ளன.

வரிசை எண் : 1399 சுவடிஎண் : 706

கியாழ வகைகள்

ஏடுகள் : 9. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது.
பக்கத்திற்கு : 5-7 வரிகள். கி. எண்ணிக்கை : 200.
அளவு : 30 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

கியாழ வகைகள் வருமாறு
சுரங்களுக்கு கியாழம்
தோலைப்பத்தின சுரக்குணம்

காலொடு வயரெ றிந்து
கண்களும் தலையும் நொந்து
பாலொடு பழமுங் கைத்து
நாவது வறண்டு பெத்தும்
மேலுற வெதும்பி யங்கம்
வேர்வைசத் தில்லாமை நொந்து

முடிவு:

மாந்த சுரத்துக்குக் கியாழம்

உத்தாமணி யெலை பஸ்பம் பள்ளிவேளைவேர் பொடுதலை
நொச்சியெலை, வெள்ளப் பூண்டு, கறிமஞ்சள்
திப்பிலி வசம்பு பஸ்பம், பள்ளி ஓமம் சும்மா போட்டு
கியாழமிட்டுக் குடுக்க மாந்த சுரம் தீரும்.

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில், சஸ்தியைப் பத்தின சுரத்துக்குக் கியாழம், உதிரத்தைப் பத்தின சுரத்துக்குக் கஷாயம், சுக்கிலத்தைப் பத்தின சுரத்துக்குக் கஷாயம், அஸ்த்தியைப் பத்தின சுரத்துக்குக் கியாழம், வாத சுரத்துக்குக் கியாழம், சுரத்துக்குக் குடிநீர் அரசின் சுரத்துக்குக் குடிநீர் முதலானவை உள்ளன.

சில ஏடுகளில் மூன்று பத்திகளாக எழுதப் பட்டுள்ளன.

வரிசை எண் : 1400. சுவடி எண் : 707.

பாலகிரகத்துக்கு மந்திரம்

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை
பக்கத்திற்கு : 5—7 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 31 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

ஓம்—கிரியும்—கிரியும், ரீயும், ரீயும், அய்யும், மய்யும், சவ்வும், சவ்வும், ஸ்ரீரியும், ரீயும்—சிவ—பவா, சிவ—ருத்திரா, சிவ—சுப்பிரமண்ணியா, ஓடிவா—ஓம் சகசிராயுதா, ஓம் வேலாயுதா, ஓம் சூலாயுதா.

முடிவு:

மாரண சக்கரம்
உச்சாடன சக்கரம்
வசியசக்கரம் ஆகியவை உள்ளன.

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், மந்திரங்கள் சக்கரங்களுடன் உள்ளன.

வரிசை எண் : 1401. சுவடி எண் 708.

அகத்தியர் ஞானம்-நூறு

ஏடுகள் : 32. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது.
பக்கத்திற்கு : 8—9 வரிகள். கி. எண்ணிக்கை : 500.
அளவு : 22 × 4½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

தொடக்கம் :

பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றும் திகிரியென்றும் படைத்த வாறும்

காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாறும்
கற்பமுண்டோ ரிஷகள் சாகாத வாறும்.

முடிவு :

வெளியோடே வெளிசேரு யீருந் தண்ணீர்
விதமான அப்புடனே சேர்ந்து போகும்
மொழியோடே தேய்வுவதிற் சேர்ந்து போகு
முற்றமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரு
மழியாத வாய்விலே வாயு சேரு
மஞ்சுமொன்ருய்க் கூடினு லாத்துமா வாகும்
வடியோடே யிவ்வற்ன்னம் அறிந்து கொண்டு
மானிடரே காயசிற்றி ஞான முற்றே. 101

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில், பதினெட்டு சித்தர்களுடைய பெயர்கள், கும்பிடு சிப்பிச் சுன்னம், பிண்டப் பெருமை, வெள்ளைக்கல் சுன்னம், தங்கநீறு, மணி, வாலை முன்றெழுத்து, குருமுனிக் குருபூசை, முதலான ரசவாதத்திற்கான மருந்துகள் உள்ளன.

இது எமது சுவடி எண் 324 (g)/D. 642 போன்றது. அதற்கும் இதற்கும் பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

வரிசை எண்: 1402 சுவடி எண்: 709.

சட்டை முனியார் காயாதி கற்பம் நூறு

ஏடுகள் : 34. ஏட்டின் நிலைமை : சற்றே பழுது.
பக்கத்திற்கு: 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 600.
அளவு : 22 × 4½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : சட்டைமுனியார். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

பாடுகிறேன் காயகற்ப மைங்கரனே காப்பு
பரிவான சின்மயத்தின் பாதங் காப்பு

நாடுகிறேன் சித்தருட பாதங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
தேடுகிறே னென்றுலு மென்னூல்ப் போலே
செப்பார்கள் காயசித்தி சித்தர் சித்தர்.

முடிவு :

பாரப்பா காயசித்தி பண்ணு மார்க்கம்
பஞ்சிட்டுப் பாரம்வைத்தால் போலே சொன்னேன்
ஏரப்பா சித்தர்சொன்ன கற்பத் துக்கு
மென்னுடைய நூலுக்கு மிசைந்து பாரு
தூரப்பா தொட்டல்லோ முடிவரைக்குஞ் சொன்னேன்
சொல்லாம லொளித்திடார் சித்த ரெல்லாங்
காரப்பா குருபதத்தைக் கார்த்தால் முத்தி
காயசித்தி பாடினதோா காட்சி முற்றே. 101

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில், வாலை எழுத்து, பூசை. கடுக்காய் சாப்பிட மாசம், கணக்கு, வேப்பன் பட்டை, சுயம் பாட, சிவனார் வேம்பு கற்பம், தூது வளை, சுன்னம், உப்புக்கட்டு, காந்த கற்பம், முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 26 (a)/D. 43, எண் 351/D. 694, எண் 352(a)/D. 695 போன்றது. பாட வேறுபாடுகள் உள்ளன.

வரிசை எண் : 1403 சுவடி எண் : 710.

வாலை பூசா விதி

ஏடுகள் : 11. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 200.
அளவு : 22 × 4½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

ஆதியந்த வாலை..................
....................தான் பாரு

சோதியந்த நடு....................
......குசு பொயினித் திருந்தார் துரை.

முடிவு:

ஒழிவுதனி லொழிவுதரும் உருதி சொல்ல
உற்பனத்தி லுற்பனமாய் உறுதி தோணும்
வெளியதனில் வெளியாகி நாதத் துள்ளே
விளங்கிநின்று வாலைப்பெண் ணுதி யாமே. 31

பூசாவிதி பாட்டு 31
குருவே துணே

காலம்:

1861-ம் வருஷம் மே மாதம் முதல்தேதி எழுதி முடிந்தது.

குறிப்பு:

இதில், வாலை பூசை முறைகள், மனமடங்கச் சாதனைகள், பூரணத்தின் மகிமை, தேவி பூசையின்றி வாதம் சித்தியாது முதலியன உள்ளன.

இது, எமது சுவடிஎண் 226 (f)/D.362 போன்றது. பாட வேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன.

வரிசை எண்: 1404. சுவடி எண்: 711

கொங்கணர் ஞானம் பதின்மூன்று

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை
பக்கத்திற்கு: 8-9 வரிகள். கி. எண்ணிக்கை: 80.
அளவு: 22 × 4½ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

விளம்புரேன் பூரகந்தான் முப்பத் திரண்டு
மேலான கும்பகந்தான் அறுபத்து நாலு
விளம்புரேன் ரேசகம்தான் பதினு ருக
விருதான மாத்திரைக ளறியச் சொல்வேன்.

முடிவு :

வாளப்பா சட்டைமுனி கற்ப நூற்றில்
வகையாக எறுதுரைப்பா ராக்கஞ் சொன்னர்
ஆளப்பா அப்படியே அண்ட மட்டும்
அவர்சொன்ன.................கொண்டு தேரே. 13

குருவே துணை
பொத்தகம் முற்றிற்று
ஸ்ரீராம செயம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பிராணயாமம் பற்றிய செய்திகள் முதலியன கூறப் பட்டுள்ளன.

—※—

வரிசை எண் : 1405 சுவடி எண்: 712

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 233. ஏட்டின் நிலைமை : சற்றே பழுது.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 2500.
அளவு : $16\frac{1}{2} \times 2$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

மேக எண்ணெய்

விள(க்கெண்)ணெய் சேர் 4. பூவற பட்ட............ர் 4. சங்ககுப்பி சார் சேர் 4. இவை கூட்டி, கிளி மூக்கு கிழங்கு பலம் 4 கருஞ்ச...ற்கம்.

முடிவு:

சூலை............வாயிவு யிதுகளுக்கு ஒரு காசியிடை யெண்ணை யில் பச்சைத் தண்ணி நாலு சொட்டு விட்டு கொடுக்கவும் நல்லா பேதியாகும். பேதியானதுக்குப் பிறகு றசமும் சாத்மும் கொடுக் கவும்.

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், ஆக்கிராணம், பேதிக்கு சண்டமாருதக் குழம்பு,சண்டமாருத செந்தூரம், அண்ட வாதத்துக்கு, விரைவாதத்துக்கு,மண்டூர செந்தூரம், கபாட லேகியம் கிருணிக்கு, கண்டங்கத்திரி நெய், பித்த குன்மத்துக்கு மருந்து, பேதி மாத்திரை, அண்ட பசுப்பம், குமரித் தயிலம் முதலியன உள்ளன.

வரிசை எண்: 1406. சுவடி எண்: 713

வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 26. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு: 5-6 வரிகள். கி. எண்ணிக்கை: 250.
அளவு: 16½ × 2 சென்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

ஊழிபேதிக்கு மருந்து

கேளப்பா ஊழியென்ற காத்துச் சொல்வேன்
கெடியான சாமளா தேவி யாலே
காளப்பா மயில்போலே கருத்து நிற்கும்
கண்ணுக்குத் தோணுது கடினம் மெத்த

முடிவு:

பேதிக்கு சாப்பிட எண்ணெய்

தேங்காயி நாலுகாயி பாலுபிழிந்து வைத்துக் கொண்டு
நேர்வாளம் பறுப்புலே யிந்த தேங்கா பாலை விட்டு
அரைத்து சட்டியில் போட்டு மீதி பாலையும்
மெதக்கவிட்டு அடுப்பில் வைத்து யெரித்து யெடுத்து
வடிகட்டிச் சீசாவில் வைத்துக் கொண்டு.

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில், ஊழி பேதிக்கு மருந்து, கருவங்கபற்பம், காரீயம், செந்தூரம் வங்கபற்பம் வாந்தி பேதிக்கு மாத்திரை, கண்ணுக்கு கலிக்கம், பூரபற்பம் தண்ணீர் தாகத்துக்கு குடிநீர், காது மந்தத்துக்கு, மூலத்துக்கு, சூலைக்கு மருந்து, சுரத்துக்கு பஸ்பம், கண்ணுக்கு கலிக்கம், பேதிக்கு சாப்பிட எண்ணெய் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1407. சுவடி எண் : 714

சண்முக பூசை--முப்பது

ஏடுகள்: 14. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை
பக்கத்திற்கு : 6-7 வரிகள். கி. எண்ணிக்கை : 200.
அளவு: 16½ × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : புலிப்பாணி. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

ஆதியாஞ் சிவனுமையு மரையுநு காப்பு
அரியயனு குலிசனெடு கிணேசன் காப்பு
வீதியாஞ் சண்முகத்தின் பூசை மாற்கம்
விளம்புகிறேன் சக்கரத்தின் தியானந் தானும்
நீதியாந் திசையுடனே மணிகள் விசித்திரம்
நிச்சயமா பலகையுட னதக தோணும்
சாதியாங் கருமமெட்டுஞ் சமத்து ஓம்
சாற்றுகிறேன் போகரிட பாதங் காப்பு. 1

முடிவு :

பரமேநீ துவாபறியுகத்தில் போக ஞதர்
பண்புடனே பூசைசெய்து பணிந்தார் பாரு
நோமேநீ யிந்தகலி முப்ப துக்குள்
கொற்றவனே புலிப்பாணி பணிந்த னப்பா 31

சண்முகத்தின் பூசை மார்க்கம்
முற்றிற்று.
வடிவேல் துணையாகவும்
தேவிசகாயம்

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில்,அறுகோண சக்கரத்தின் பெருமையும், எந்தெந்தக் காலத்தில் யார் யார் பூசித்தனர் என்றும், அதன் பலன் இன்னதென்றும் கூறப் பட்டுள்ளன.

இதன் பின், ஒரு ஏட்டில் சக்கரங்களுடன் மந்திரங்கள் எழுதப் பட்டுள்ளன.

வரிசை எண் : 1408. சுவடி எண் : 715

வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 13. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது.
பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 250.
அளவு : 12 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

சூதக வாயுவு

சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு நாற்களஞ்சி
துலங்கியதோர் திரிகடுகு காந்த முள்ளி
காயமா யித்துடனே யிந்துப்பு கழல்பருப்பு தானும்
யிதமாக ஓரொன்று களஞ்சாய்க் கொண்டு

முடிவு:

அரையாப்புச் சூலை சொல்லாத வேதையிட்டால்
யேழுமாத்து சுருக்காகாச பற்பம்சேர்த்துக் கொண்டால்
கல்லான வியாதியெல்லாந் தீர்ந்து போகும்
கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் கண்டு பாரே.

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில், சூதக வாய்வு, குன்மம் திரட்சிக்கு, வீரக்கட்டு, லிங்கக்கட்டு உப்புக்கட்டு, தாளகக் கட்டு, அயச்செந்தூரம், பல் வலிக்குக் கிஷாயம்

தலையிடிக்கு நசியம், பவளபற்பம், குழந்தைகளுக்கு பிரளிநோய்க்கு எண்ணெய், வெள்ளைக்கு, துவாலைக்கு, தாம்புரபற்பம், காலாக்கினி ருத்திரன், வெட்டைக்கு, முதண்டகிஷாயம், அரிதாரபற்பம் ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 1409. சுவடி எண் : 716

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 30. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 500.
அளவு : 12 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

(இர)ண்டு சாமமரைத்து அயச்சிமிளி...............
வைத்துக்கொண்டு, சுரத்துக்கு சுக்கு சித்திரத்தை
யிலிடவும். 13 சன்னி, 7 தோசத்துக்கு அரத்தை
சுக்கு கிரும்பு திப்பிலி யிஞ்சி (மாவி)லிங்க பட்டை
வேலை காட்டாமணக்கு.

முடிவு :

காயவைத்து கீழே யிரக்கி வைத்துக் கொண்டு பொடியை அரைக்கால் நாழி வருத்து குடுக்கையிலடைக்கவும்.

குன்மம் பீலிகை சூலை தீரும். தூரம் யில்லாது உண்டாகும். பணவிடை கருப்புட்டியிலூட்டி அண்ணுக்க முழுங்கவும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், முதல் ஏடு இல்லை. இதில் !வாதத்துக்கு அஞ்செண்ணைத் தயிலம்,வில்வாதி குளம்பு,தந்த னேய்க்கு,மேகம்,கிரந்தி, அரையாப்புக்கு பார்வை, திருஷ்ட்டி, ஏவலுக்கு, யீட்டு வகை, பெரிய கலிக்கம், சகல சந்நி பிரவீச்சுக்கு முதலியன உள்ளன.

வரிசை எண் : 1410. சுவடி எண் : 717

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 94. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை.
பக்கத்திற்கு : 8-10 வரிகள். கி. எண்ணிக்கை : 1500.
அளவு : 12 × 3 சென்டிமீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

நீலகண்ட மந்திரம்

அங் கிலிங் சிங் நசி நசி.
ஓம் பிறீங் இறீங் சிம.
இது அமாவாசியில் 25000
நீலகண்ட அபிஷேகத்துக்கு மந்திரம்
ஓம் கிலி என்று செபிக்கவும்.

முடிவு :

மூணுசாமம் அரைத்து புடம் போடவும்,
இப்படி குரைச்சு அஞ்சுபுடம் போட
பற்பம் கபவிதி 20-ம், சலரோகம் 21-ம்
தீரும்-தேனில் கபத்துக்கு............கும்
இச்சாபத்தியம்.

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில், நீலகண்ட மந்திரம், சண்டமாருத செந்தூரம், 'சண்முகம் சொன்னது', கருணுவி மை, சவ்வீர மை, பேய் தோண அஞ்சனம்,' மகுடி அடைக்க, நாய், பாம்பு வாய் கட்ட, மச்சமுனி ஞயன் 800-த்தில், காலாங்கினி ருத்திரன், வங்கபற்பம் முதலியன உள்ளன.

இடையிடைய மந்திரங்களும் சக்கரக்களும் உள்ளன. தெலுங்கு எழுத்துக்கள் சக்கரத்தில் எழுதப்பட்டுள்ளன.

——

வரிசை எண் : 1411 சுவடி எண்: 718(a)

புலத்தியர் ஞான கற்பம்--முன்னூறு

ஏடுகள் : 20. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8—9 வரிகள். கி. எண்ணிக்கை : 400.
அளவு : 15 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : புலத்தியர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

(சீரு)லாவிய தென்பொதிகையில் வாழ்
மேருசூ ழகற்றீச ரருளினல்
(கா)ருறு புலத்தீசர் விளங்கிய
கார்மதம் பொழியானைப் பணிகுவாம். 1

முடிவு:

விளையுந் தகடா கிதமும்
வெண்ணப்பி ரேகம் போலாங்
களைய தீதம் பதினறு
காந்திமதி சூழும்
குளையெனவும் குப்பிதனில்
கொண்டதனைத் தாக்கி
முளையெனவுஞ் சூட்டிமிக
முத்தமதில் வையே. 109

புலத்திய ரருளிச் செய்த ஞானகற்பம் முன் ஞானம் 109

முற்றும்
சிவா

காலம்:

பிரமாதீச வருஷம் பங்குனி மாதம் 28-ந் தேதி வெள்ளிக்கிழமை

குறிப்பு :

இதில், தலைப்புப் பக்கம் சிதைந்துள்ளதால் தலைப்புக்கள் தெரிய வில்லை. ஏடுகளும் மிக மிகப் பழுதுபட்டு படித்தற்கியலாத நிலையில் நடுவில் உள்ளன.

வரிசை எண் : 1412. சுவடி எண் : 718(b)

புலத்தியர் மெஞ்ஞான கற்பம்--பின்னூறு

ஏடுகள்: 22 (21-42). ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 400.
அளவு : 15 × 3 செண்டி மீட்டர்- எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : புலத்தியர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

முத்திதரு ஞானவீதி மூலச் சுழிமீதில்
சத்தியபி ராமியருட் சதுர்க்கமல பீடம்
பெற்றியருட் மத்தகெஜ சித்திரமணி வாசல்
நித்தமலர் பொழியறவி நிற்மலமுங் காப்பாம் 1

முடிவு :

ஆத்திடும் புதம்ஜயஞ்சு மாத்தாஞ்
சூத்திர மாகுஞ் சுணங்கன் விருஷம்பால்
போத்திடு முன்பு கழிந்த செய்கைதான்
மா.............................. 107

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில் கடைசி ஏடு இல்லாததால் முற்றுப் பெறவில்லை. இதிலும் தலைப்புக்கள் ஒடிந்துள்ளன.

வரிசை எண் : 1413. சுவடி எண் : 719

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 19. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 6-7 வரிகள். கி. எண்ணிக்கை : 300.
அளவு : 18 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

வேதாந்திப் பெரிய தம்பியாருடைய
பாதமே கெதியாகவும்

ஆவாறம் எண்ணெய்

ஆவாறம் பூவு
ஆவாரம்பட்டை
ஆவாரம்பிஞ்சு
ஆவாரம் இலே

இது மூன்றை(?)யும் பயிர்போல் நறுக்கி உரலிலிட்டு இடித்து புடைத்து தூளாயிடித்து 6 படி தண்ணீர்விட்டு, மருபடி முன் சொல்லிய தூளை அதிற் போட்டு

முடிவு :

பொடலன் முதுவக்காய்,தொவரன் பருப்பு,கொடுக்கால்புளி, எலுமிச்சம்பளம், வருத்தஉப்பு, $\frac{1}{2}$ மண்டலம் உற்கொள்ளவும்.

21-ம் நாள் தலேக்கு நல்லெண்ணெய் தேய்த்து சியக்காயில் தலேக்கு யிடவும்.

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில்,7-வது ஏட்டில், அகஸ்த்திய மாமுனியினருள் பெற்ற பாதமே துணே,வால சுப்பிரமணியருடைய பாதமே துணே. என்றுளது. பின்புறம், இது மகாராஜராஜ ஸ்ரீ மாணிக்க வயிதிக-வெ-மாரிமுத்து யென்பவருடையது. சரஸ்வதியம்மன் துணேயாகவும் என்றுளது.

அடுத்த ஏடுமுதல்மேகத்துக்கு,ஜெயத்துக்கு,துன்மார்க்க வியாதிக்கு துன்மார்க்கமான வியாதிக்கு பேதி முதலியன உள்ளன.

வரிசை எண் : 1414. சுவடி எண் : 720

கொங்கணர் கடைப்பிள்ளே நவக்கிரக கக்கிஷம்

ஏடுகள் : 17. ஏட்டின் நிலேமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 600.

அளவு : 36 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

ஆதியென் மூலமந்திர மரியென் றோதி
அறிந்தபின்பு நவக்கிரக கக்கி ஷத்தை
நீதியுடன நீ குருவாய் விளங்க வேண்டி
நிலையறிந்த கொங்கணவர் பாதம் போற்றி
ஓதியதோர் மந்திரகலைக் கியான மான
உண்மையென்ற வேதபூ ரணமே காப்பு.

முடிவு :

நன்மையுள்ள நாட்டமதாய் நயநம் பாத்து
நயனமென்ற கண்ணெறிந்து விண்ணை நோக்கித்
தன்மையுடன் தன்ன(றி)வே தானு மென்று
தின்றொளிவும் விண்ணொளிவும் ஒன்றாய்க் கண்டு
சின்மயமும் தன்மயமு முண்மை யாகத்
தெளிந்துசிவ சிவமயமாய்த் தெளிவாய் முத்தே.

குருபாதமே கெதி.
முற்றிற்று.

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில், 2-ம் ஏடு தொடக்கத்தில் ஒடிந்துள்ளது. இது சோதிடத்தைச் சாரும். அகத்தியர் நவக்கிரக கக்கிஷத்தின் வேருயது. இதில், மூக்கு, மூக்கு, காது, காது, மூலம் மூலம் என்ற தொடர்கள் காணப்படுகின்றன. நூல் முழுவதுமிருக்கிறது. கர்க்கசம் என்பது கக்கிஷம் என்ருயிற்று.

முதல் ஏட்டில், இதில் சகாப்தம் கூட இருக்கிறது. குதிரையடி என்றுளது.

வரிசை எண் : 1415. சுவடி எண் : 721

கொங்கணர் கடைக்காண்ட சூத்திரம்- அறுபது

ஏடுகள் : 31. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5-6 வரிகள். கி. எண்ணிக்கை : 450.
அளவு : $21\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : கொங்கணர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

ஆதியந்தங் கடந்துநின்ற பூரணந்தான் போத்தி
அம்மனோடு மூலத்திற் கிணேசன் காப்பு
பாதியிந்து மலர்கடந்த மூலர் காப்பு
பரமாகி யடியிருந்த போகர் காப்பு

முடிவு:

உள்ளபடி முப்பாழுக் கப்பால் நின்ற
ஓகோகோ சுருதிமுடிந் திட்ட வாறு
வள்ளலே பூரணத்தின் தீட்சை சொன்னேன்
வளமான கனியொன்றும் கனிந்த முற்றே. 61

முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில், மனம் அடங்கும் முறை, வழலை முறை, வழலை செய்முறைகள் சவர்க்காரம் செய்முறைகள்-உவர்ச்சாரம் எட்டு விதம், கல்லுச்சுன்னம் மச்சமுனி தீட்சை, கும்பமுனி தீட்சை, ஆறு தீட்சை, சிவ தீட்சை, சத்தி தீட்சை, மௌனதீட்சை, போலி குருக்கள் முதலியன கூறப்பட்டுள்ளன. மேலும், குருக்கள் லட்சணம், அவரில் போலி, புவனேசுவரி தீட்சை, திரிபுரை தீட்சை, சியாமளா தீட்சை, அம்பிகா சக்தி தீட்சை, வல்லபை தீட்சை, மயேசுவரி தீட்சை, ஆருதார தீட்சை, சமாதி தீட்சை முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 234 (*b*)/*D*. 387 போன்றது.

———

வரிசை எண் : 1416. சுவடி எண் : 722

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 94. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5-7 வரிகள். கி. எண்ணிக்கை : 800.
அளவு : $11\frac{1}{2} \times 2$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

லிங்க மெழுகு

லிங்கம்	பலம்	1	ரசசெந்தூரம் பலம் 1
இந்துஉப்பு	,,	1	வெங்காரம் ,, 1
வாளம்	,,	1	ஆமண பற்பம் சரியிடையாயி
காந்தம்	,,	1	கல்வத்தில் அரைக்க
வீரம்	,,	1	மெழுகாகும்
பூரம்	,,	1	

முடிவு :

சன்னிக்கி ஒத்தடம்

.........ருக்கன் பூவு ஓமம் யிது மூன்றும்......லிடித்து ஒத்தடம் கொடுக்க சன்னி தீரும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், சாம்பிராணி பதங்கம், கெந்தி மெழுகு, வயறு கடுப்புக்கு பஷ்பம், குமரித் தயிலம், கொம்பரக்குத் தயிலம், மேகயெண்ணெய், கோடாசூழி மாத்திரை, கோரேசினை மாத்திரை, உப்பு சுன்னம் வயத்து வலிக்கு வெள்வங்கபற்பம், வீக்கத்துக்கு கியாழம், ஆருத புண்ணுக்கு பிளாஸ்த்திரி முதலியன உள்ளன

வரிசை எண் : 1417. சுவடி எண் : 723.

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 25. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 100.

அளவு : $11\frac{1}{2} \times 2$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

வீக்கத்துக்கு புகை போட மருந்து

ஓமம்	பலம்	1	பால் சாம்பிராணி பலம்—1
லிங்கம்	,,	1	எல்லா சரக்கையும் கல்வத்தி
ரசம்	,,	1	லிட்டு அரைத்து வெள்ளை
தாளகம்	,,	1	துணியில் தேன் மெழுகை
கெந்தி	,,	1	ஒத்தாப்பி(ல) தடவி

முடிவு :

தூள்பண்ணி சாத்தி போட்டு ஓட்டில் போட்டு கிண்டி
ரெண்டு குன்றியிடை கொடுக்கவும் பன வெல்லம்.

கடவுள் துணை
சூதகவா(ய்)வு பாறிச வா(ய்)வு மகோதரம்
யிதுகள் தீரும்

காலம் :

இல்லை.

குறிப்பு:

இதில், விக்கலுக்கு, கிருணி, போக்கு, குட்ட மருந்து, ஆமையோட்டு பற்பம், கொடிவேலி தைலம், பூர பஸ்பம், பாம்பு கடிக்கி, சுரத்துக்கு தாளக பற்பம், பறங்கிப்பட்டை லேகியம், உப்பு பற்பம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 1418. சுவடி எண் 724.

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 38. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—7 வரிகள். கி. எண்ணிக்கை : 600.
அளவு : $24 \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

துருசு செம்பு

துருசு பலம் 1 தூள் செய்து இரும்பு கரண்டி வெள்ளையாயி துலக்கி துருசு பொடி போட்டு பழச்சார் விட்டு நாலு கடுக்காயி தோல் ஞுலு நொனா புங்கன் பழத்தோல் தூள் செய்து போட்டு அரைவீசம்படி சலம் விட்டு கலக்கி

முடிவு :

பல்லி தம்பனம்—மலாயி பாஷை

பல்லி ஞயத்துக்கிழமை நிர்வாணமாயி அடித்துதோலுரித்து சத்துருவு நீர்க்குழி மண்ணெடுத்து—தியானம்—பிக்கிபானு பிக்கி கெயன பானு பிக்கி சாத்தொ சவுதா பானு—தொனெனுதோ தொனெனுதொனெனு சம்பாரணி 1008 செபம் பண்ணி பல்லி தோலில் போட்டு கட்டி தலைகீழா கட்டவும்—தம்பனம்.

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில், சாரக்கட்டு செந்தூரம், லிங்கக்கட்டு, சாரசெயநீர் வேதை குரு, வெள்ளை பாஷாணம் செந்தூரமெழுகு, துருசு நுடி சுன்னம், சூதக் கட்டு, உப்புக்கட்டு, மேகவாய்வுக்கு யெண்ணெய், தந்த வாய்வு பல் ஆட்டம் தீரும். கெவுரிவேதை, ரசவேதை, வெள்ளைப்பாஷாண வேதை முதலியன உள்ளன.

வரிசை எண்: 1419. சுவடி எண்: 725.

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 82. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டநிலை.
பக்கத்திற்கு: 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 800.
அளவு : 12 × 2½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

கணத்தெண்ணெ

